Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 03 (01.09.2003) திங்கட்கிழமை இதழ்: 332

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-s/askr @ evreka.lk
(சி.1136)

## வடக்கு – கிழக்கு தமிழ்மக்களுக்கு

# சுயநிர்ணய உரிமையுடன் கூடியதான தீர்வு;

# குழப்புவதற்கு இந்தியத் தூதரகம் முயற்சி!

## இன்று முதல் பஸ்கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

பருவகால சீட்டுக்கான கட்டணங்களும், பஸ் கட்டணங்களும் இன்று முதல் அதிகரிக்கபபட்டுள்ளது என்று, இலங்கைப் போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் பருவகால சீட்டுக்கான கட்டணம் - பஸ் கட்டண அதிகரிப்பை விட குறைவாகவே இருக்கும் என்று, இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் தலைவர் தெரிவித்துள்ளார்.

பருவகால சீட்டுக் கட்டணங்கள் 12 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை இன்று முதல் அதிகரிக்கப் படும் என்று அவர் தெரிவித்தார்.

## விநாயகமூர்த்தி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

**வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வு ஒன்று எட்டப்படுவதைக் குழப்பிவிடவேண்டும் என்று- தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில அரசியல்வாதிகளை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் கோரியிருப்பதாகவும்,**

**இது தொடர்பாக சில கூட்டமைப்பு அரசியல் வாதிகள் தூதரகத்துக்கு அழைத்துப் பேச்சு நடதத்தப்பட்டிருப்பதாகவும் -**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமகால அரசியல்நிலை தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- இந்தியாவிடமிருந்தோ, சந்திரிகா விடமிருந்தோ அல்லது ரோவிடமிருந்தோ - நாம் உதவியைப்பெற்று எமது கட்சியினை நடத்தவில்லை. எமது கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மறைவிற்குப் பின்னர்- நாம் அரசியலில் தனித்து நின்று போட்டியிட்டவேளைகூட 'விடுதலைப் புலிகள்தான் ஏகப்பிரதிநிதிகள், பிரபாகரன்தான் எமது தலைவர் எனத் தெரிவித்துள்ளோம்.

எமக்கும் புலிகளுக்கும் கொள்கையளவில் வித்தியாசமில்லை. நான்கு கட்சிகளும் - விடுதலைப் புலிகள் தான் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறி அரசியல் செய்யவே ஒன்று

(10 ஆம் பக்கம் பாரக்க)

## அரியாலை இளைஞன் லண்டனில் படுகொலை!

(அரியாலை)

லண்டனில் அரியாலை இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த இரத்தினசேகரம் அசன் (வயது 21) என்ற இளைஞனே கொல்லப்பட்டவராவார்.

காரில் சென்று கொண்டிருந்தபோது, இனந்தெரியாதவர்களால் இவர் வழிமறிக்கப்பட்டு - விரட்டிவிரட்டி வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

மேற்படி இளைஞனின் சடலம் - சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் உள்ள பற்றைக்குள் பல மணி நேரம் கவனிப்பாரற்று அநாதரவாகக் காணப்பட்டது என்றும் தெரியவருகிறது. இச்சம்பவம் குறித்து லண்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (55)

## ஜே.வி.பியினரால் நடத்தப்படுகின்ற ஆர்ப்பாட்டங்கள் நியாயமற்றவை!

### என்கிறார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

ஜே.வி.பி.யும் பொ.ஐ.மு.யும் இணைந்து நடத்திவரும் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு ஊர்வலங்களும் நியாயமற்றவை என்று, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்த காலத்தில் - ஜே.வி.பி.கட்சியின் உதவியுடன் நாட்டில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளால், நாடு முழுவதிலும் ஏராளமான உயிர்கள் பலியாகியதுடன், நாட்டின் பொருளாதாரமும் வறுமைக்கோட்டிற்குக் கீழே தள்ளப்பட்டது.

நாடு கடனில் மூழ்கி, விடுதலைப் புலிகளுடனான போரில் - இராணுவம் பலமிழந்து, அரசாங்க அமைச்சுக்களில் ஊழல்கள் அதிகரித்து, ரத்வத்தை போன்ற அமைச்சர்கள் பலர், தங்கள் கைகளில் சட்டத்தை எடுத்துக்கொண்டு - கொலைகள் பல புரிந்துவந்த மிக மோசமான நிலையிலேயே, மக்கள் - ஐக்கிய தேசிய முன்னணியைத் தெரிவு செயதனர். அத்துடன் ஜே.வி.பி.யின் பல

(10 ஆம் பக்கம் பாரக்க)

## வடக்கு-கிழக்கு மாகாணத்தை நாங்கள் பிரிக்க விடமாட்டோம்!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிங்களத் தலைவர்கள் எமது தமிழினத்திற்கு செய்த அநியாயத்தைப் போல் - நாம் முஸ்லிம்களுக்கு செய்யமாட்டோம். ஆனால், வட -கிழக்கு மாகாணத்தை முஸ்லிம் தலைவர்கள் பிரிக்க இடமளிக்கமாட்டோம் என, நேற்றையதினம் யாழ்.காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற 'சமகால கருத்தரங்கில்' நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கிழக்கில் முஸ்லிம்களை பொலிஸிற்கு சேர்ப்பதையிட்டு நாம் எதிர்ப்பினை காட்டியுள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகமொன்று உருவாகும்போது- பொலிஸ் அதிகாரம் பற்றி யோசிக்க வேண்டும். பிராந்திய பொலிஸின் இணக்கப்பாடு இல்லாமல் - 550 பேரை பொலிஸிற்கு இணைப்பதை நாம்

(10 ஆம் பக்கம் பாரக்க)

### விண்ணாணம் விநாசியர்



தீர்வு கிடைக்கிறது பொறுக்குதில்லைப் பாருங்கோ..!

## 'பொங்கு தமிழ்' நிகழ்வில் அரச ஊழியர்கள் கலந்துகொள்வதை எவரும் தடுக்கக் கூடாது!

### அமைச்சர் வஜிர அபேவர்த்தன

'பொங்கு தமிழ்' நிகழ்வு ஜனநாயக மரபிலான கலாசார நடவடிக்கை. அரச ஊழியர்கள் இதில் கலந்துகொள்வது நல்லது.

இவ்வாறு பொது நிர்வாக மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தனா - பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

பல ஆண்டுகளாக போர் நடந்த நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் - இப்படிப்பட்ட ஜனநாயக நிகழ்வுகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது என்று கூறிய அமைச்சர் அபேவர்த்தனா -

இதில் அரசாங்க ஊழியர்கள் கலந்துகொள்வதை யாரும் பலவந்தமாகத் தடுக்கக்கூடாது. இதற்கெல்லாம் அரசு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

'பொங்கு தமிழ்' விடுதலைப் புலிகளால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்ச்சி என்றால், விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிமுறைக்கு வந்தது நமக்குக் கிடைத்த பெரியவெற்றி ஆகும்.

ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் செழிக்க வைப்பது அரசின் கடமை என நான் நினைக்கிறேன். விடுதலைப் புலிகளும் ஓர் வன்செயல் அமைப்பாக இருந்து, தற்போது அரசியலுக்கு வந்துகொண்டிருக்கும் அமைப்பாகும். அவர்கள் ஒரு ஜனநாயக அமைப்பாக வருவதற்கு சகலரும் ஆதரவு வழங்கக் வேண்டும் என்றும் அமைச்-சர் குறிப்பிட்டார்.

### பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மறியல் போராட்டம்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி, மாகாணக்கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக, இன்று மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நீண்டகாலமாக பகுதிநேர ஆங்

(10 ஆம் பக்கம் பாரக்க)

## தமிழர் ஆசிரியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை

(திருகோணமலை)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கவும், ஆசிரியர்களின் சம்பளத்தினை அதிகரிக்கவும் கோரி, தமிழர் ஆசிரியர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தமிழர் - ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்குக்- கல்வி அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் கடந்த காலங்களில் நடதத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது, விசேட அமைச்சரவையின் அங்கீகாரத்தைப்பெற்று நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(10 ஆம் பக்கம் பாரக்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்

# இருபத்திரண்டு வயதிற்கு குறைந்தவர்கள் எவரும் இனி மினிபஸ் செலுத்த முடியாது

## தனியார் போக்குவரத்துச்சபை மாநாட்டில் தீர்மானம்

இருபத்திரண்டு வயதிற்குக் குறைந்தவர்கள் எவரும், இனி மினி பஸ்களைச் செலுத்த முடியாதென வும், மதுபோதையில் மினிபஸ் களைச் செலுத்தும் சாரதிகளுக்கு தண்டப்பணமாக மூவாயிரம் ரூபா அறவிடப்படவும், நேற்று நடைபெற்ற தனியார் போக்குவரத்துச் சேவையி னரின் மாநாட்டில் தீர்மானம் எடுக் கப்பட்டது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் - யாழ்.மாவட்ட தனியார் போக்குவரத் துச் சேவை சங்கங்களின் தலைவர் கெங்கன் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த அமுதன், பாலையா ஆகி யோரும் கலந்துகொண்டார்

இருபிரிவுகளாக இடம்பெற்ற இந்த மாநாட்டில், யாழ்.மாவட்ட போக்குவரத்து உதவி ஆணையா ளர் பத்மநாதனும் கலந்துகொண்டு, போக்குவரத்து நடைமுறைகள் பற்றி எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போராளி பாலையா - இன்று சார திகள், நடத்துனர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின் றன. அவற்றைத் தடுக்கக்கூடிய வகையிலேயே சாரதிகள், நடத்து னர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு பஸ் சேவைகளை மேற்கொள்வதன் மூலம், மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவேண்டும்.

பயணிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகள், மனப்பாங்குகள் இருக்கும். அவற்றை உணர்ந்துகொண்டு பணியாற்றினால், தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனத் தெரி வித்தார். ஆனால், சாரதிகள் - நாம் என்ன? மக்களை ஏற்றி இறக்கி னோம், அதுதவிர வேறு ஏது செய் தோம் என எண்ணுகிறார்கள். இது தவறு. மிகப் பெரியதொரு பணியை நீங்கள் செய்துகொண்டு இருக்கிறீர் கள், உங்கள் பணிதொடர வேண் டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில், சில சாரதிகள் வேகமாக வாகனம் செலுத்துவது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட் டது.

நிகழ்வில் பெருந்திரளான சாரதிகள், நடத்துனர்கள் எனப் பல ரும் திரண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# ஆனையிறவு ஏ - 9 வீதிப் பாலம் திருத்தும் பணிகள் தீவிரமாகிறது

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் - பாலங் களின் புனரமைப்புப் பணிகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

யாழ்.கண்டி வீதியின் ஆனையி றவுப் பகுதியிலுள்ள பாலம் - கடந்த கால யுத்தத்தினால் மிக மோசமா கப் பாதிக்கப்பட்ட நிலையில், தற் போது மீண்டும் புதிதாகப் புனர மைக்கப்படும் பணி நடைபெற்று வரு கிறது.

அத்துடன், அதே இடத்திலுள்ள பிரிதொரு பாலமும் உடைந்து காணபபடுவதுடன், மிகவும் அபாயக ரமாகவும் உள்ளது. மழைகாலங் களில் இந்தப் பாலத்தினூடாகப் பாரிய வாகனங்கள் நாளாந்தம் செல் வதால்- வாகன ஓட்டுனர்களும், பய ணிகளும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, ஏ - 9 வீதி திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### சபரீச ஐயப்பன் மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு, சபரீச ஐயப்பன் தேவஸ்தான மணவாளக் கோல விழா, இன்று நடைபெறவுள் ளது.

காலை 5 மணிக்கு ஆரம்பமாக வுள்ள இந்த விழாவில் - 6 மணிக்கு யாகபூசையும், மாலை 6.30 மணிக்கு சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும், 9.30 மணிக்கு பிராயச்சித்த அபி ஷேகமும் நடைபெறவுள்ளது.


நிரஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், சிம்ரன் நடித்த

அரசு

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

THE PEACE KEEPER

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல்

மாதவன், சிம்ரன், நடித்த

பார்த்தாலே பரவசம்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1284)


# தெல்லிப்பளையில் நடைபெற்ற தேசிய பேராளர் எழுச்சி சங்கமம்

தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங் கமம் நேற்று நடைபெற்றது. அள வெட்டி மகாஜனா சபை மண்டபத் தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்- யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளரும், தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளருமாகிய செம்மணன் சிறப்புரையாற்றினார்.

முன்னதாக - வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ் மாறன், தமிழீழத் தேசியக் கொடி யை ஏற்றிவைத்தார். பொதுச்சுட ரினை, மாவீரரது தந்தையாரான வேலாயுதம் ஏற்றிவைத்தார். தெல் லிப்பளை பிரதேச எழுச்சிப் பேரவை யின் செயலாளர் -ச.தனபாலசிங்கம் தலைமையில், இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொல் சூ சிறில், இணைப்பாளர் கனகலிங் கம், வலிகாமம் கோட்டச் செயலாளர் சாம்பசிவம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

ஊரகக்கிளை உறுப்பினர்களால், தமது பிரதேச வேலைத்திட்ட முன் மொழிவுகள் செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் - தெல்லிப்பளைப் பிர தேசத்தைச் சேர்ந்த ஊரகக்கிளை உறுப்பினர்கள், கிராமசேவையாளர் கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் ஊனமுற்றோர் வருடாந்த விளையாட்டு விழா!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற் றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் வரு டாந்த விளையாட்டுவிழா, நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற இந்தப் போட்டி, நேற்று இறுதிநாள் நிகழ்வுடன் நிறைவ டைந்தது.

இறுதிநாள் விளையாட்டு நிகழ் வில் - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி முல்லை குருமுதல்வர் தேவசகா யம், யாழ்.மாவட்ட ஊனமுற்றோர் சங்க இணைப்பாளர் ஜனகன், யாழ் மாவட்ட ஊனமுற்றோர் சங்க வாக உத்தியோகத்தர் தில் நாதன் ஆகியோர் மங்கள விள கினை ஏற்றினர்.

தேசியக் கொடியினை, மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த வேலுசாந்த குமாரி ஏற்றினார். நிறுவனக் கொடி யினை, நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதி சிவமாறன் ஏற்றினார்.

# 'அஸ்ரா வெற்றிக் கிண்ணம்' கால் இறுதிப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் - 14 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிக ளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கால் இறுதிப் போட்டி, இன்று திங்கட் கிழமை, யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடை பெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் - அநுரா தபுரம் மாவட்ட எப்பாவல மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

(58)


# மிதிவெடி அபாயக் கல்வி வாரம் - யாழ்.மாவட்டம்

## செப்ரெம்பர் 01 - 07

✪ மீளக்குடியமர அல்லது தொழில் நிமித்தம் புதிய இடத்திற்குச் செல்லும்போது, அவ்விடம் ஆபத்தானதா என, அவ்வூர் வாசிகளிடம் கேட்டு அறிந்துகொள்வோம்.

✪ ஆபத்தான பிரதேசங்களைத் தவிர்த்து நடப்போம்.

ஆபத்தான பிரதேசங்களாவன,

⇒ கைவிடப்பட்ட









- ✦ இராணுவ மண் அரண்கள் (பண்ட்).
- ✦ காவல் நிலைகள்.
- ✦ பதுங்கு குழிகள்.
- ✦ வீடுகள்.
- ✦ வயல் நிலங்கள்.

✦ இராணுவ எச்சங்கள் உள்ள இடங்கள்.

⇒ மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகை போடப்பட்ட இடங்கள்.

⇒ முள்ளுக்கம்பிச் சுருள் உள்ள இடங்கள்.

## ஆபத்து நிறைந்த பூமியில் அவதானமாக நடப்போம்

மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் - யாழ்ப்பாணம்

(சி.1421)

# இஸ்ரேலுடனான ஆயுதபேர ஊழல் குறித்து அறிக்கை தருமாறு சந்திரிகா கோரிக்கை

இஸ்ரேல் அரசுடன், ரணில் அரசு மேற்கொண்ட ஆயுதபேரம் குறித்தும், அதன்போது நடைபெற்றதாக நம்பப்படும் ஆயுதபேரஊழல் குறித்தும் ஆராய்ந்து, முழுமையான அறிக்கை தர ஒரு விசேட உயர்மட்டக்குழுவை உடனடியாக நியமிக்கும்படி சந்திரிகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சரத் அமுனுகம இதுகுறித்து தெரிவிக்கையில்- தற்போதைய ஆளும் கட்சியின் லஞ்ச ஊழல் நிறைந்த ஆயுத பேரம், சர்வதேச அளவில் அதிகரித்துள்ளதாகவும், இஸ்ரேல் உட்பட பல நாடுகளிடமிருந்து பெறப்பட, ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள - மிகப் பலம்வாய்ந்ததும், நீண்டதூரம் தாக்க வல்லதுமான விமான எதிர்ப்புப் பீரங்கிகள், போராயுதங்கள் போன்றவை பெறப்படுவதில் இடம் பெற்றிருக்கக் கூடிய லஞ்சஊழலை, வெளிக்கொண்டுவர உடனடி உயர்மட்டக்குழு நியமிக்கப்படவேண்டும் என்று கேட்டுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஆகியோர் இஸ்ரேலிலிருந்து பெற்றுக்கொள்ள ஒப்பந்தம் செய்த, நவீன யுத்த தளபாடங்களை- அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு - இலங்கைக்கு வழங்க இணங்கியிருந்தபோதிலும், அதைத் தவிர்த்து, இஸ்ரேலிடம் இருந்து பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்டதற்குக் காரணம் - அதற்குப் பின்னே மறைந்துள்ள பெருந்தொகை லஞ்சப் பணமே என்று குறிப்பிட்டுள்ள சந்திரிகாவின் பேச்சாளர், இதை ஆராய்வதுடன், இனிவரும் காலங்களில் அமெரிக்காவிடம் இருந்து நவீன யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஆளும் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.








நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பிய தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினை வரவேற்கும் நிகழ்வில் - தளபதிகள் கேணல் பானு மற்றும் கேணல் துர்க்கா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதற்படத்திலும், தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஜே.வி.பியுடன் இணக்கம் ஏற்படாததற்கு ஜனாதிபதி சந்திரிகாவே காரணம்!

## அனுரா பண்டாரநாயக்க குற்றச்சாட்டு

ஜே.வி.பி.யுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி இணைவது குறித்து, இதுவரை ஒப்பந்தம் எட்டப்படாமைக்குத் தனது சகோதரி சந்திரிகாவே முழுமையான காரணம் என ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும், சகோதரருமான அனுரா பண்டாரநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஆகிய பொ.ஐ.முன்னணி பிரமுகர்கள், ஜே.வி.பியுடன் இணையும் விடயத்தில் அதிக அக்கறை காட்டிவந்தாலும், ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ போன்றவர்களின் அசமந்தப் போக்கினாலும், அக்கறையின்மையாலும் இந்த இணைவு பிற்போடப்பட்டுவருவதாகவும், இந்த இணைவை எப்படியும் டிசம்பர் மாதத்திற்குள் சாத்தியப்படுத்திவிட, உயர்மட்டத்தில் ராஜதந்திர அசைவுகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த வருட ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான திட்டத்தை, ஜனாதிபதி சந்திரிகா தயாரித்து வரும் நிலையில், டிசம்பருக்குள் ஜே.வி.பியுடன் இணைந்து விடுவது நல்லது என்று அனுரா - ஏனைய உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பு சுற்றிவளைப்பில் 127 பேர் கைதாகியுள்ளனர்

(கொழும்பு)

கொழும்பில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது 127 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சோதனை நடவடிக்கைகளைப் பொலிஸாரும், இராணுவத்தினரும் மேற்கொண்டதாகக் கொழும்புப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை ஆறு மணியுடன் முடிவடைந்த, 24 மணித்தியாலங்களுக்குள் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின்போதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் காலப்பகுதியில் 153 வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டதுடன், 54 ரோந்து நடவடிக்கைகளும் இடம்பெற்றதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொன்மையான சுடுமண் வளையக்கிணறு தண்ணிமுறிப்பு கிராமத்தில் கண்டுபிடிப்பு!

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பில் மீளக்குடியமர்ந்த மக்கள் - புதிதாகக கிணறு ஒன்றை வெட்டியபோது, அதன் ஒரு பக்கத்தில் இரண்டரை அடி விட்டத்தில், 8 அடி ஆழத்தில் நேர்த்தியாகத் தோண்டப்பட்டு, அதனுள் அமைக்கப்பட்ட 2 அடி விட்டத்தில் 1 அடி உயரமுடைய 3 சுடுமண்வளையங்கள் சிதைந்த நிலையில் எடுக்கப்பட்டன.

கிணறு அமைக்கப்பட்ட காலத்தின் பின், அதன் மேல் 3 அடி உயரத்திற்கு வண்டல்மண் வலிமையாகப் படிந்துள்ளது. 2000 ஆண்டுகளிற்கு முற்பட்டதாக இது இருக்கும் எனக் கருதப்படுகிறது. 1885 இல் முல்லைத்தீவு நகரின் வடக்கில், இத்தகைய சுடுமண்வளையக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டது.

பூநகரி கிராஞ்சியில் 2800 ஆண்டுகள் தொன்மையானதென காபன்-14 காலக்கணிப்பு செய்யப்பட்ட சுடுமண் கிணறு, இன்றும் மக்கள் பயன்பாட்டிலுள்ளது. முன்னர், யாழ்ப்பாணம் - வல்லிபுரத்தில் ஒரு சுடுமண் கிணறு எடுக்கப்பட்டு, தொல்லியல் திணைக்களத்தினால் கொண்டு செல்லப்பட்டது. இந்தியாவில் அஸ்தினாபுரத்திலும், தமிழகம், திருநெல்வேலி, காயல், அதிச்சநல்லூர், ஆற்காடு, செங்கமேடு ஆகியவற்றில் 2800 ஆண்டுகள் தொன்மையான சுடுமண் வளையக்கிணறுகள் எடுக்கப்பட்டன. தற்பொழுது தண்ணிமுறிப்பில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் வளையக்கிணறு, தொல்லியல் தேடலாளர் ந.குணரட்ணம் குழுவினரால் அகழ்வு செய்யப்பட்டது.



தண்ணிமுறிப்புக் கிராமத்தில் - கிணறுவெட்டும்போது கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் வளையக் கிணற்றை படத்தில் காணலாம்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவுக்கு தார்மீக கடமையுண்டு

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. தெரிவிப்பு

(புதுடெல்கி)

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவுக்கு ஒரு தார்மீகக் கடமை இருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் - இந்தப் பிராந்தியத்தின் ஒரு பெரிய நாடு என்ற ரீதியில் - இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு - அதில் ஈடுபடவேண்டிய தார்மீகக் கடமையாக இந்தியாவுக்கு இருக்கிறது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியிலுள்ள 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் - சமஷ்டி அமைப்பு முறைபற்றிய கருத்தரங்கில் பங்குபற்றுவதற்குப் புதுடெல்கி சென்றபோதே, ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கருத்தரங்கில் பங்குபற்றிய பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தச் சமஷ்டி என்ற கருத்தரங்குமூலம், பல தெளிவுகளைப் பெற்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளும் - சமஷ்டி அமைப்புமூலம் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்றநிலைப் பாட்டுக்கு வந்துள்ளனர். அதனால், இந்தியாவிலுள்ள சமஷ்டி அமைப்புப் போலல்லாது, அதற்கு அப்பாற் சென்று, சமஷ்டி அமைப்பை இலங்கையில் ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# முஸ்லிம்களுக்குச் சொந்தமான களவாடப்பட்ட சைக்கிள்களை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியிலிருந்து பல்வேறு நபர்களால் அபகரித்துச் செல்லப்பட்ட முஸ்லிம்களுக்குச் சொந்தமான சைக்கிள்களை - விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த சைக்கிள்கள், தற்போது விடுதலைப் புலிகளின் அக்கரைப்பற்று செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாக, கல்முனைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ராஜ்குமார் தெரிவித்தார்.

அத்துடன் - இந்த சைக்கிள்களைப் பொலிஸாரூடாக உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு பட்டிப்பளையில் மீளக்குடியேறவிருந்த மக்களை இராணுவத்தினர் தடுத்துள்ளனர்

மட்டக்களப்பு பட்டிப்பளையில், போரின்போது முற்றாகக் கைவிடப்பட்ட தமிழ் குக்கிராமமான கச்சகோடி சுவாமிமலையில், முன்னர் வாழ்ந்த மக்கள் மீளக்குடியேறச் சென்றபோது, இராணுவம் அவர்களைத் தடுத்து, திருப்பி அனுப்பியுள்ளது.

90 கிலோமீற்றர் சதுரஅடி நிலப் பரப்பைக் கொண்ட இந்தக் கிராமத்தில், 1985 ஆம் ஆண்டுவரை, கிட்டத்தட்ட 253 தமிழ்க் குடும்பங்கள் வரை வாழ்ந்தார்கள் என்றும், அப்போது தொடுக்கப்பட்ட இலங்கை அரசின் இன அழிப்பு மற்றும் மண் பறிப்புப் போரின்போது, முற்றாக இடம்பெயர்ந்து சென்றதனால், இந்தக் கிராமம் கைவிடப்பட்ட நிலையில், அரசபடைகளின் முற்றுகையில் நீண்டகாலம் இருந்ததாகவும் கூறப்படுகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், நிகொட் அமைப்பும் மேற்கொண்ட அதீத முயற்சியினால், பாதிக்கப்பட்டு அங்கும் இங்கும் வறுமையில் வாழும் இந்தக் கிராமத்து மக்களை, மீளக்குடியமர்த்த இணக்கப்பாடு காணப்பட்டபோதிலும், இந்த மக்கள் அந்தக் கிராமத்திற்குச் சென்றபோது, இராணுவத்தினர், இவர்களை அந்தக கிராமத்திற்கு அண்டிய பகுதிகளில் குடியேறும்படி பணித்து, அந்தக் கிராமத்தில் குடியேற மறுப்புத் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

தற்போது நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கெதிரான இந்த இராணுவ அத்துமீறல் குறித்து மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதோடு, விரைவில் கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்கும் கொண்டுவரவுள்ளதாகப் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

# சொத்துக்களை வெளிப்படுத்தும் காலக்கெடு முடிவடைந்துள்ளது

வருமானங்களையும், சொத்துக்களையும் வெளிப்படுத்தும் காலக்கெடு நேற்றைய தினத்துடன் முடிவடைந்துள்ளது. இதுவரை சுமார் 50 ஆயிரம் பேர் தமது சொத்துத் தொடர்பான விபரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் காட்டியுள்ளனர்.

கடந்த காலங்களில் "வற்" வரிமூலம் 20 பில்லியன் ரூபாவினை அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது. ஆனால், அது கிடைக்காததையிட்டே, இவ்வருடத்திற்கான துண்டுவிழும் தொகையை ஈடுசெய்ய முடியாதநிலைமையினாலேயே, அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளிற்காக நேற்றும், நேற்றுமுன்தினமும் லீவு நாட்களாக இருந்தும்கூட, உள்நாட்டு இறைவரித்திணைக்களம் திறந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளைய தமிழ் மருத்துவர்கள் சேவையாற்ற முன்வரவேண்டும்

## தமிழீழ சுகாதாரசேவைப் பணிப்பாளர்

(ஆழியவளை)

யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினால், கடந்த ஜூன் மாதம் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் (எம்.பி.பி.எஸ்) சித்தியடைந்த இளைய தமிழ் மருத்துவர்கள்- பாதிக்கப்பட்ட எமது பகுதி மக்களுக்குச் சேவையாற்ற முன்வரவேண்டும் என, தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்தார்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த மருத்துவ சமூகத்தினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்- தமிழர் தாயகப் பகுதிகளில், வைத்தியர்களின் பற்றாக்குறையினால் மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல், அரசும் திட்டமிட்டு தமிழ் வைத்தியர்களைத் தமிழர் பகுதிகளுக்கு அனுப்புவதில் தொடர்ந்தும் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது.

எனவே, இக்குறையைப் போக்க வேண்டியவர்கள் எமது இளைய மருத்துவ சமூகத்தினரே எனவும் அவர் தெரிவித்தார். (122)

### வாகன அனுமதிப்பத்திரம் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரமரத்தினம் என்பவரது N.P.G.Q 2017 இலக்க வாகன அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## அடிப்படை வசதிகளற்றநிலையில் வவுனியா-பெரியமடு கிராம மக்கள்

(ஆழியவளை)

வவுனியா வடக்கு - பெரியமடுக் கிராமத்தில் மீளக்குடியமர்ந்து வசித்து வரும் சுமார் 40 குடும்பங்கள், எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றிச் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

6 வருடங்களின் பின், தமது சொந்தக் கிராமத்தில் மீளக்குடியேறிய இக்குடும்பங்களுக்கு, அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எவ்வித உதவிகளையும் வழங்கவில்லையென, மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். (122)



அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன் உரையாற்றுதைப் படத்தில் காணலாம். (55)

## தேசிய கல்வி நிறுவகத்தினால் தொடர்பாடல் பயிற்சி செயலமர்வு!

(ஆழியவளை)

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் கட்டிளைஞர் இனவிருத்திச் சுகாதார கல்விச் செயற்திட்டத்தின்கீழ், ஒத்த வயதுக்குட்பட்ட தொடர்பாடலுக்கான பயிற்சிச் செயலமர்வு - எதிர்வரும் 4, 5, 6, 7 ஆம் திகதிகளில் தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து தரம் 10 இலுள்ள நான்கு மாணவர்களும், பொருத்தமான ஆசிரியரும் பங்குபற்ற உள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் தேசிய கல்வி நிறுவகத்தால், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வின்போது, மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைச் சேவை வழங்கப்படவுள்ளது.

பயிற்சி செயலமர்வில் பங்குபற்றுவோருக்கு- இருப்பிட வசதி, உணவு வசதி என்பன வழங்கப்படுவதுடன், நாளொன்றுக்கு ரூபா 300 வீதம் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. (122)

## அதிபர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்!

இலங்கை அசிரியர் சேவையிலுள்ளவர்களுக்கான வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சை, இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவையிலுள்ள வகுப்பு I , 2-II, 2-III, 3 ஆகிய தரங்களைச் சேர்ந்தோர் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சையைக் கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், தொழிற்சங்கங்கள் அழுத்தம் கொடுத்ததன் பேரிலேயே யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (122)

### சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

வலி.வடக்கில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய பன்னிரண்டு பேர்- யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பிரதேசங்களிலிருந்த வெற்றிடங்களுக்கு நிரப்புவதற்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (68)

### வீதி புனரமைப்பு

(மல்லாகம்)

மல்லாகம் தொந்தனை வீதி புனரமைப்புச் செய்வதற்காக வீதியை விசாலமாக்கும் பணி இடம்பெறுகிறது. இதனால் முன்பிருந்த வேலிகள் சுற்றுமதில்கள் தகர்க்கப்பட்டு, புதிதாக எல்லைகள் அமைக்கப்பட்டுவருகின்றது. (68)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பரீட்சை நிலையம் அறிவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான- கணித விஞ்ஞான புதிர் போட்டி, எழுத்துப் பரீட்சை - எதிர்வரும் 6 ஆம் திகதி, பின்வரும் பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக, வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், கைதடி விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும்-

போட்டியில் பங்கு பற்றும் மாணவர்களுடன், இரு ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (34)

### சிங்களக் குடும்பங்களுக்கு நிவாரணம்

(ஆழியவளை)

மணலாறு பகுதிகளில் வசித்து வரும் சிங்களக் குடும்பங்களுக்கு, வன்னி புனர்வாழ்வு அமைச்சினால் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

கடந்த 25 ஆம் திகதி இப்பகுதிக்குச் சென்ற வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூரும், செயலாளர் இரா. தர்மகுலசிங்கமும் - சுமார் 200 குடும்பங்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாவும், கூரை விரிப்புக்களையும் வழங்கினார்கள். (122)

### மலசலகூட வசதி

மருதங்கேணிப் பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்டு, மீள இயங்கிவரும் 10 பாடசாலைகளில்- ஜி.ரி.இசற் நிறுவன உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மழைக்காலம் நெருங்கிக் கொண்டிருப்பதால், மிகவிரைவில் இவற்றைக் கட்டிமுடிப்பதற்கு ஜி.ரி. இசற் நிறுவனத்தினரும், கல்வித் திணைக்களமும், பாடசாலை சமூகமும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (122)

### மோசமான நிலையில் வீதி

(தென்மராட்சி)

சாவகச்சேரியிலிருந்து தபாலக வீதியூடாகக் கனகம்புளியடிக்குச் செலலும் வீதி, மிகவும் மோசமானநிலையில் சேதமடைந்துள்ளது.

இதனால், இவ்வீதியூடாகப் பயணிப்போர், பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தகாலப் போரினால் மூன்று மைல் நீளமான இவ்வீதியில், பாரிய குழிகள் காணப்படுகின்றன. இவ்வீதி திறக்கப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும், இன்னமும் திருத்தப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (34)

## ஆய்வுகூடப் பரிசோதனை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி பிரிவினரால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனை சேவை, பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரை நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரிசோதனைகளில் பங்குபற்றவுள்ள பொதுமக்கள், முதல்நாள் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி வரை மீசாலையிலுள்ள சங்க அலுவலகத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு பிரிவுத் தலைவர் செ.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆய்வுகூடப் பரிசோதனைகள் வெகுவிரைவில் சாவகச்சேரி நகரில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (34)


வாழ்க வளமுடன்

1½ HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : க.அஷ்னி
முகவரி : சுவிஸ்சர்லாந்து.

முதலாவது அகவையில்

பெயர் : இ.அனுசன்
முகவரி : கருணாநிதி ச.ச.நிலையம், வல்வெட்டி



நான்காவது அகவையில்



பெயர் : ந.லோகிதா
முகவரி : சிவன் வீதி, உரும்பிராய்.

நான்காவது அகவையில்

பெயர் : சி.லினிஷா
முகவரி : கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



பத்தாவது அகவையில்



பெயர் : ஜெ.அஞ்ஜனா
முகவரி : முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------------
பெற்றார் ஒப்பம்

# இலக்கியச்சோலை

# தாவில்

# எனது ஊரிலும்தான்

## சி. கதிர்காமநாதன்

அங்கம்-6

அல்லது சுருக்கமாக எழுதிவைத்து விடுவார்களா? முதலில் வீட்டு உரிமையாளர் என்னைப் பற்றி அறிவித்தாக வேண்டும். நாளை முதல்வேலையாக அவரைப் பார்க்க வேணடும். அவர் இங்கு தங்கியிருப்பது குறைவு. வெளியூர் சென்றுவிடுவார். முதலாளி இங்கே இருந்தால் பிரச்சினை இல்லை.

"சாதம் சாப்பிட்டேன்." என்றார் சிதம்பரத்தின் அம்மா.

சிதம்பரம் வந்தபின் சாப்பிடத் தீர்மானித்தேன். மறுபடியும் இரவு ஒன்பது மணிக்குச் செய்தி வாசிக்கத் தொடங்கும்போது, சிதம்பரம் வந்துவிட்டார். செய்தியில் மறுபடியும் எச்சரித்தார். செய்தி முடிந்ததும் சாப்பிட்டேன்.

சிதம்பரம் என்னோடு அறைக்கு வந்துவிட்டார்.

"என்ன சிதம்பரம் செய்தியைப் பார்த்தால் கட்டாயம் பதிய வேணும் போலக்கிடக்கு"

"பதியத்தான் வேணும் பதியாமல் விட்டால், ஏதேனும் சிக்கலாயிடும்" நாளைக்கே போகலாம்தானே?" சிதம்பரத்திடம் கேட்டேன்.

"நாளைக்கு போகலாம்"

சற்றுநேரம் இருவரும் சிந்தனையில் மூழ்கி விட்டோம். ஆரம்பக்கட்டமாக, ஒரு நிகழ்ச்சி தொடங்கிவிட்டது. இனிப் போகப்போக என்னென்ன அறிவித்தல்கள் வருமோ? எனது இடத்தில் எங்கள் ஆட்கள் இருப்பது குறைவுபோல. நடந்து செல்லும்போது ஒரு சிலரைக் கண்டிருக்கின்றேன்.

வெளியிடங்களில்தான் அதிகம் வசிக்கிறார்கள்.

"முரளி! இடையில் நான் சிதம்பரம் போகணும். அப்புறம் வாரணாசியில தான் மிச்சப் படிப்பு படிக்கணும்"

சிதம்பரம் தன் விடயத்திற்கு வந்தார்.

"வாரணாசி போனா, அடிக்கடி வரஇயலாது தானே?"

"வரமுடியாது வருஷத்திலே லீவு இருந்தா வரலாம். தூரம் அதிகமாச்சே" மறுபடியம் ஒரு பிரிவு வந்துவிடுமா? ஸ்ரீராம்போல சிதம்பரமும் போய்விடுவாரா?

"என்ன சிதம்பரம்? என்னத் தனியா விட்டிட்டுப் போயிடுவீர்போலக் கிடக்கு" நீரென்ன தொடர்ந்து இங்க தங்கப் போறீரே? ஊருக்குப் போறதில்லையா? நான் வாரணாசி போன கையோட, நீரும் ஊருக்குப் போற வழியப் பார்க்க வேண்டியதுதான்"

எனக்கும் அப்படித்தான்படுது சிதம்பரம், ஆனால் முதலாளி இல்லாமல் எப்படிப் போறது?"

"எப்படிப் புறப்படுறதோ? முதலாளி வராம அங்கேயே தங்கிட்டா, என்ன பண்ணுவீர் போகாமலா இருப்பீர்?"

சிதம்பரம் சொல்வது சரியாகப்பட்டது. இவரைப் பார்த்துக்கொண்டு இருக்கலாமா? கடிதங்கள் ஒழுங்கில்லை நான் தனியா இருப்பது தெரிந்தும், பொறுப்பில்லாமல் இருக்கிறார்.

"முரளி எனக்கு உம்மட முதலாளி மேல நம்பிக்கை இல்லை"

"ஏன் அப்படிக் சொல்லுறீர்?"

"எனக்கு அப்படித்தான் தோணுது. ஏதோ புத்திசாலித்தனமா நடந்துகொள்ளும். நாளைக்குக் காலையில பொலிஸ் ஸ்ரேசன் போகலாம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மனம் நிம்மதியின்றித் தவித்தது. காரசாரமான கடிதமொன்று எழுதவேண்டியதுதான். இங்குள்ள நிலை நல்லதாகப்படவில்லை. ஏதேனும் நடந்தாலும், யாருக்கும் தெரியாது. உடன் கடிதம் எழுதத் தீர்மானித்தேன்.

பொலிஸ் ஸ்ரேசன் போகும்போதே, என்னைப் பற்றி விபரங்களை பாஸ் போட்டுடன் எழுதிக்கொண்டு போனோம். அங்கு கூட்டம் கொஞ்சமாக இருந்தது.

நாங்கள் ஒன்பது மணிக்குப் போய்விட்டோம். வாங்கில் உட்காரவைத்திருந்தார்கள். இரண்டு பேர் பதிவு வேலைகளை மேற்கொண்டிருந்தார்கள். சில தெரிந்த முகங்களும் தென்பட்டன. நாம் பேசிக்கொள்ளவில்லை.

கேள்விகள் அதிகமாக இருந்தன.

பதிய வந்த ஒருவர் மொட்டையடித்துக்கொண்டு வந்தார். 'மொட்டை போட்டாற்போல' தப்பிடலாம்னு பாக்கிறியா" ஒரு பொலிஸ்காரர் கிண்டலாகச்சொல்ல, மற்றவர்கள் பெரிதாகச் சிரித்தார்கள்.

பொலிஸ் ஸ்ரேசனின் பின்புறமிருந்த கொட்டிலில் இருவர் ஜட்டியுடன் நிறுத்திவைக்கப்பட்டிருந்தார்கள்.

"என்ன சொல்றாங்க" ஒரு பொலிஸ்காரர் அடுத்தவரிடம் கேட்டார்"

"நாங்க திருடல என்கிறாங்க"

"இவங்களை என்னபண்ணப் போறீங்க ஏட்டு" அந்தப் பொலிஸ்காரர் எங்கள்ளச் சுட்டிக்காட்டிக் கேட்டார். 'ஏட்டு' எனப்பட்டவர் எங்களைப் பற்றிய குறிப்புக்களை எழுதிக் கொண்டிருந்தவர்.

"என்ன செய்யப் போறாங்களோ தெரியல்ல. நமக்குத் தலையிடிதான்" எப்போ இங்கு வந்தது? என்ற கேள்வியிலிருந்து சாப்பாட்டிற்கு எப்படிப் பணம் வருகிறது? வீட்டில் என்ன பொருட்கள் இருக்கின்றன? என்றெல்லாம் கேட்டார்கள். இறுதியாக மூன்று போட்டோப் பிரதிகளும், பாஸ் போட் பிரதியும் எடுத்துக்கொண்டு நாளை மறுபடியும் வரச்சொன்னார்கள்.

வெளியே வந்துவிட்டோம்.

சூடாக ரீ குடித்தால் நல்லதுபோலத் தெரிந்தது. இருவரும் ரீக்கடைக்குப் போனோம்.

"சிதம்பரம் நாளைக்கு எங்கட வேலை முடிஞ்சிடுமோ?" நான் சந்தேகத்துடன் கேட்டேன்.

"முடியுமோ தெரியல்ல. வரவேண்டியதுதான்"

ரீ குடித்து விட்டு, வீதியில் நடக்கத்தொடங்கினோம்.

மறுநாள் போனபோது பதிவுசெய்பவர் மாலை வருவார் என்று கூறினர். மறுபடியம் பின்நேரம் போனோம். இன்று வெளியே பலர் இருந்தார்கள். அவர் வந்துவிட்டார்.

வீட்டு வாடகை பற்றிக் கேட்டார். நான் மட்டும் தனியாக இருப்பது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நீங்கள்ளாம் கேடிங்க ஆச்சே"

நான் பேசாமல் இருந்தேன்.

போட்டோப் பிரதியொன்றை, எனது விபரங்களடங்கிய பத்திரத்தின்மேல் ஒட்டினார். ஊர் விலாசம் கேட்டு எழுதிக்கொண்டார்.

மறுபடியும் ஏதேனும் பிரச்சினை நடந்து, குறிப்பிட்ட இடங்களில் நாங்கள் இல்லையென்றால் இந்தப்படங்கள்தான் எம்மைப் பிடிக்க உதவும்.

'உங்களோட யாராச்சும் வந்து தங்கினா, உடனடியாக எங்களுக்கு அறிவிக்கணும். தொடர்ந்து இங்க நிப்பாங்கன்று தெரிஞ்சா, இங்க பதியணும். நினைவில வச்சுக்குங்க"

அவர் சற்றுக் கடுமையாகச் சொன்னார்.

"நாங்க எந்நேரமும் சோதனை செய்ய வருவோம். ஜாக்கிரதை" மேலும் பயம் காட்டினார்.

ஒவ்வொரு நாளும் காலையில் பொலிஸ் ஸ்ரேசன் போய் கையெழுத்து போட்டுவிட்டுவந்தா, இது ஒன்றும் தேவையில்லையே' என்று நினைத்தேன்.

ஒரு வழியாக வேலை முடிந்து, வெளியே வந்தோம்.

"முரளி ஒரு மாதிரி இந்தப் பிரச்சினை தீர்ந்திடிச்சி. இனிப்பயமில்லை"

"எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. பிறகு என்னென்ன விபரீதங்கள் வருகுதோ தெரியாதுமனம் சங்கடமாய் இருக்கு.

ப்ளாட்டிலே நான் பொலிஸ் ஸ்ரேசனிலே போய்ப் பதிவுசெயத விடயம் தெரியவந்தது. எல்லோரும் நிம்மதியாக இருந்தது போலத் தெரிந்தது.



பஸ் திருத்த வேலை முடியும் தறுவாயில் இருந்தது. பணம் தான் கையைக் கடித்தது. பஸ் ஓடத்தொடங்கினால், காசுப் பிரச்சினையைச் சமாளித்து விலாம. இம்மாத வீட்டு வாடகையைக் கொடுக்கவில்லை. 5 ஆம் திகதிக்குமேல் ஆகிவிட்டது.

சிதம்பரம் நாளை பயணம் போவதை நினைத்தாற் கவலையாக இருந்தது. இனிக் காண்பது எப்போது? நான் அதுவரை இருப்பேனா? ஊருக்குப் போகமுடியுமா? ஒரேகுழப்பமாக இருந்தது.

மத்தியானம் வீட்டிற்கு ஒரு கடிதம் வந்திருந்தது. வீட்டு உரிமையாளர் என்னைப் பற்றிய சகல விப்ரங்களையும் பொலிஸ் ரேசனில் அறிவித்தார். 'நகலை' அனுப்பியிருந்தார். பிரச்சனை தீர்ந்தது. மனதுக்குகொஞ்சம் ஆறுதலாக இருந்தது. இந்தக் குழப்பமான நேரத்திலும், ஒரு சந்தோசமான நிகழ்ச்சியும் நடநதது. சிதம்பரத்தின் தங்கை 'பெரிய பிள்ளை' ஆனதுதான்.

சிதம்பரம் சொன்னமாதிரிப் பயணம் செய்யமுடியவில்லை. எல்லோரும் சந்தோசமாக இருந்தனர். எனது வீட்டில் நடந்தது போன்ற உணர்வில் நான் இருந்தேன். கடைசித் தங்கை. சரியாக என் அம்மா மாதிரியே இருந்தாள். உயரம் குறைவு. சடங்கு நிகழ்வினை அளவாக, சிக்கனமாகச் செய்தார்கள். சிதமபரத்தின் வீடு சிறியதாக இருந்ததால், எமது இடம் அவர்களுக்கு உதவியாக இருந்தது. மதிய உணவு, எனது இடத்திலே நிகழ்ந்தது.

சிலோன்காரர் - இதோட உங்கட கல்யாணச் சாப்பாட்டையும் போட்டிருங்க" என் காதுபட சிலர் சொன்னார்கள். சிதம்பரத்தின் அம்மா - உறவினர்கள் அனைவருக்கும் என்னை அறிமுகப்படுத்தினார்.

எல்லாம் முடிந்து, இரண்டு நாட்கழித்து சிதம்பரம் பயணம் புறப்பட்டார். மாம்பலம் ரயில் நிலையம் வரை இருவரும் எதுவும் பேசவில்லை. ரயில் ஏறமுன் சிதம்பரம் இதைத்தான் முக்கியமாகக் கூறினார்.

"எவ்வளவு சீக்கிரம் ஊருக்குப் போகமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் போயிடும். கடிதம்போட மறக்கவேண்டாம். என் வீட்டிற்கு வழக்கம்போல கூச்சப்படாமல் போம்".

மனம் உடல் எல்லாம் சோர்வாக இருந்தது. நாட்கள் கடந்தன. பஸ் ஓடத்தொடங்கிவிட்டது. வீட்டு வாடகையும் கொடுத்தாகிவிட்டது.

ஒருநாள் வீட்டு உரிமையாளரின் மகன் என்னைக் கண்டு, தன் தந்தை ஏதோ முக்கிய விடயம்பற்றிப் பேச வேண்டியிருப்பதாகக் கூறினார்.

என்னவாக இருக்கும்?

சிலவேளை, வீடு தேவை என்று சொல்வாரோ? நடந்த பிரச்சினைகளை யோசித்திருப்பார். ஏன் தேவையில்லாமல் சிக்கலில் மாட்டவேண்டும் என்று நினைத்திருப்பார். இந்த வேளைதான், முதலாளியின் கடிதம் வந்தது. நான் கொடுதது வைத்தவனாம். நிம்மதியாக இருந்கிறேனாம். அங்கு மின்சாரம் இல்லை. போக்குவரத்து சீரில்லையாம். சண்டையில், எல்லாமே குறைந்துவிட்டதாம். உள்ளூர் உற்பத்திகள் பெருகியுள்ளனவாம். தான் கொழும்புக்குப் போக உத்தேசித்திருக்கிறாராம்.

சே! என்ன வாழ்க்கை எல்லா வழியாலும் அடக்குமுறை தானா?

தான், இங்கு வருவது பற்றி அவர் ஒன்றும் ஏழுதவில்லை. சிதம்பரம் அன்று சொன்னது நினைவிற்கு வந்தது. இப்போது, நான் சில தீர்க்கமான முடிவுகள் எடுத்தாகவேண்டும்.

அன்று காலை வீட்டு உரிமையாளர் என்னைத்தேடி வந்து, விடயத்தைச் சொன்னார். நான் நினைத்தது சரியாகிவிட்டது.

என்னோட மகன் வாடகை வீட்டில குடியிருக்கிறார். அவருக்கு இப்ப வீடு தேவையா இருக்கு. நீர் வீட்டக்காலிபண்ணிக் கொடுக்கணும். இரண்டு மாசம் தர்றேன். மததப்படி உமக்கும் எனக்கும் எந்த சிக்கலும் இல்லே. வாடகை ஒழுங்கா கொடுததிடுவீங்கள். இப்ப வீடு தேவை.

இவருக்கு என்ன பதில் சொல்வது. காலி பண்ணிக்கொடுப்பது இலகுவான காரியமா. நான் எப்படி வேறு இடம் எடுக்க முடியும்.

அவரிடம் என் நிலையைச் சொன்னேன். அவர் அதை எடுத்துக்கொள்ளவில்லை.

"தம்பி நான் செட்டியாரிடம் ஏற்கனவே சொல்லி விட்டேன். இந்த அறையை உங்களுக்கு எடுத்துக்கொடுத்ததே, அவர்தான். எப்படியும் ரெண்டு மாசத்துக்குள்ள காலிபண்ணிக் கொடுத்திடும். ஏதோ நல்லபடியா முடிஞ்சா நல்லது" என்று சொன்னபடி, என்னை ஒரு மாதிரி பார்த்தார்.

செட்டியார்வீடு மாறிப்போய், ஒரு கிழமையாகிவிட்டது. நான் இதை எதிர்பார்க்கவில்லை. அவரிடம் என் பிரச்சினை தொடர்பாகப் பேசுமுன், அவர்போய்விட்டார். எதிர் பிளாட்டில குடியிருந்தாலும், அவரிடம் தொடர்பு குறைவாகவே இருந்தன. காரணம் - வீட்டிலே செட்டியாரைப் பார்ப்பது அரிது. காலையில் எத்தனை மணிக்குப் போகிறார். எத்தனை மணிக்கு வருகிறார் என்பது தெரியாது. சில நேரங்களிலே இரவு பன்னிரண்டு மணிக்கு மேலே பார்த்ததுண்டு. பஸ் ஒபிசில், பஸ் வேலைக்காக மார்வாடியிடம் பெருந்தொகைப் பணம் வாங்கியதாகத் தகவல். இந்தச் சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறியது நினைவுக்கு வந்தது.

"இந்த இடம் ராசியில்லை. வேறு இடம் பார்த்தாத் தேவலை"

முடிவில் இடம் மாறிவிட்டார். புரசைவாக்கத்தில் தான் வீடு எடுத்திருப்பது தெரிந்தது. இனி என்ன செய்வது? எனக்கு இவர் மூலம்தான் வீடு எடுக்கமுடியும். வேறுவழி தெரியவில்லை. இவர் உதவி செய்யாவிட்டால்.....

யோசிக்க யோசிக்க விசர் பிடிப்பது போன்றிருந்தது.

முதலாளியை அவசரமாகக் கூப்பிடலாமா? முடியாத காரியம்.

(தொடரும்)

# கிழக்கும் மேற்கும்

## ஔவையார் – சோக்கிரட்டீஸ்



அதிசயக் கனியொன்றை
அளித்ததோர் அரசு
அறிஞரை வளர்த்தது
அன்று – கிழக்கிலே!
கொடிய நஞ்சினைக்
கொடுத்தோர் அரசு
அறிஞரை வதைத்தது
அன்று – மேற்கினில்!!

சோழ நாட்டுள்ள
உறையூரினிலே
ஆதி அன்னையும்
பகவன் தந்தையும்
பெண்மகவொன்றினைப்
பெற்றெடுத்தனரே!
ஏழைமையினாலோ
என்ன காரணத்தாலோ
பெற்றவர் மகவினைக்
கைவிட்டேகின்றனர்!
மகவொன்றைக் கண்ட
பாணன் மகிழ்ந்து
மகவினை எடுத்து
வளர்த்தான் அன்புடன்!
வளர்பிறை போல
வளர்ந்தது குழந்தை!
தன்மகள் நெஞ்சினில்

இறையன்பின் வளர்ச்சியும்
கலைகளின் தேர்ச்சியும்
அழகின் செழிப்பும்
கண்ணுற்ற பாணன்
தன்னன்பு மகளை
மணமகளாய்ப்
பார்த்துளம் மகிழ்ந்திட
மனத்திடை விரும்பினான்!
தந்தையின் கருத்தினை
அறிந்தவள் வருந்தினாள்!
இல்வாழ்வை வெறுத்தாள்
இறையருளாலே
முதியதோர் துறவியின்
வடிவத்தைப் பெற்றாள்!
“ஔவை'' யாகினாள்!
தமிழ்ப்பணி செய்திடத்

தாகம் கொண்டவராய்
நடந்தார் ஊர்தொறும்!
மக்களோடிணைந்து
மக்கள் நல்வாழ்வுக்காய்
நல்லறிவூட்டினார்!
நல்வழி காட்டினார்!!

பறம்பு நாட்டினை
அரசாண்ட பாரி
நாடி வருவோர்க்கும்
வாடி வருவோர்க்கும்
மாரிபோல் வரையாது
வாரி வழங்கியவன்!
முல்லைக் கொடிக்குத்
தன்தேர் கொடுத்தவன்!

காசினி போற்றிடும்
கடையெழு வள்ளல்களில்
பறம்பு நாட்டரன்
பாரியும் ஒருவனாம்!
அழுக்காறு அவாவினால்
பறம்பு நாட்டினை
முற்றுகையிட்டனர்
தமிழ் மன்னர் மூவரும்!
முடிவின்றி நீடித்த
முற்றுகை இறுதியில்
மன்னன் பாரியின்
இன்னுயிர் குடித்தது!
வள்ளலின் உய(யி)ர் நண்பன்
புலவராம் கபிலரின்
அயர்வில்லா முயற்சியால்
பாரியின் புதல்வியர்
அங்கவை – சங்கவை –
வள்ளலின் பேரன்பைப்
பெற்றிட்ட ஔவையின்
தளர்வில்லா முயற்சியால்
தமிழ்மன்னர் மூவரும்
வாழ்த்துக்கள் மொ(பொ)ழிந்திட
மலையனின் புதல்வர்க்கு
மணமாலை சூட்டினர்!

(தொடரும்)

**முருகு**

# நூல் அகம்

## நெருப்பு வேள்வி



**வே**ள்வி நெருப்பு என்ற பெயரிலான ச.வே. பஞ்சாட்சரத்தின் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. ஒரு பக்கம் முதல், ஒன்றரை பக்கம் அளவிலான 50 சின்னஞ் சிறிய கதைகள் இத் தொகுப்பில் இடம்பெறுகின்றன. 1969 ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்த இந்தக் கதைத் தொகுப்பு, தற்போது 'தூண்டி' வெளியீடாக வருகின்றது.

வேள்வி நெருப்பில் இடம்பெறும் கதைகள் - சமுகம், வறுமை, பெண், காதல, மாணவர், எழுத்தாளர் தொடர்பானவையாக அமைகின்றன.

ஒருவனிடத்தில் உதவி பெற்று, பின்னர் அவனை உதறித்தள்ளும் சமூகம், சாதிக்கும் காதலுக்கும் ஏற்படுகின்றபோர், இன்னொருவன் உழைப்பில் அண்டிப்பிழைக்கும் மனிதமனம், பங்காளிகள் மனோநிலை, சில்லறை வியாபாரியின் இயல்புகள், புகழைப் பெறத்துடிக்கும் மனிதர் மனவெளிப்பாடு, பேச்சுக்கும், வாழ்வுக்கும் இடையே நிலவும் தொடர்பின்மை, மரியாதைக்குக் கட்டுப்படும் மனிதனின் உளவியல், பிறருடைய சொத்தை அடையத்துடிக்கும் மனிதர், திருடர் உருவாகும் விதம், திருடனைத்திருத்தும் வழி இவ்வாறாகச் சமூகத்தைத் தனது கதைகளிலே ச.வே.பஞ்சாட்சரம் சித்தரிக்கின்றார்.

தனது சுகம், தனது மகிழ்வு என்பவற்றிற்காக மட்டும் இயங்கும் கொடிய மிருகம் - கடமைக்கும், பாசத்திற்கும் இடையில் நின்று தத்தளிக்கும் மனிதன், தன் மகனிடத்தில் பாசம் வைத்திருக்கும் தாயின் தெய்வத்தன்மை என்றவாறு, மனிதர்களின் பல்வகை வேறுபாடுகளை வேள்வி நெருப்பில் காணமுடிகின்றது.

வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும் என்ற மாணவியின் மன வைராக்கியம், வறுமையால் திருட்டுப் பட்டம் கட்டப்பட்ட தன் மகளிற்காகக் கொதித்தெழும் தாய், வறுமையால் திருடும் ஏழை, இரக்கத்தால் பொலிஸிடம் அகப்படும் அவலம், ஏழைகளுக்கே தொடர்ந்தும் துன்பம் ஏற்படுகின்றன போன்ற, வறுமையின் பல்வேறு கோணங்களைச் சித்தரிக்கும் கதைகளும் - வேள்வி நெருப்பில் இடம்பெறுகின்றன.

அதிக சுதந்திரம் கொடுத்து வளர்க்கும் பெண்ணால் அடையும் அவலம், விபசாரிகளிடம் சென்றால் ஏற்படும் தொல்லை, ஒருவன் காதலை ஏற்காததால் அடையும் பெண்ணின் கவலை, இன்னொருத்தியின் கணவன் என்றறிந்தும், அவனை அடையத்துடிக்கும் பெண்ணின் மனநிலை, 'பெண்ணின் பெருமூச்சு நிற்கும் போதுதான் இந்த நோய் குணமாகும் என்ற 'கர்மவியாதி' இவ்வாறான பெண்களையும் 'ஈடில்லாத் தாயன்பு' தொடர்பாகவும் 'வேள்வி நெருப்பின்' கதைகள் குறிப்பிடுகின்றன.

காதலை எவ்வாறு எடுத்துக்கூறவேண்டும் என்பதற்குப் புதியதொருவழியும், ஒருவனை நினைத்து ஒருத்தி மனதால் வாழ்கின்ற வாழ்வும், குஷ்டரோக ஆஸ்பத்திரியில் பல வருடங்களின் பின்னர் சந்திக்கும் இரு காதலர்களின் உணர்வுகள், காதலால் பாதிக்கப்பட்டபோதும, வாழத்துடிக்கும் ஒரு பெண்ணின் ஏக்கமும், நாட்டுப் பற்றுக்கொண்ட மங்கையின் மனநிலையும், காதல் தொடர்பாக வேள்வி நெருப்பில் இடம்பெறும் கதைகளின் கருத்துக்களாக அமைகின்றன.

ஆங்கில அறிவு பெற்றபோதும், தாய் மண்ணை மறக்காது மாணவன், தன் வாழ்வில் ஏற்பட்ட அனுபவம் வேறு எவர்க்கும் வந்துவிடக்கூடாது எனத் துடிக்கும் இன்னொரு மாணவன், வேள்வி நெருப்பில் - மாணவர்களுக்கு நல்லொழுக்கங்களைப் போதிக்கின்றன.

எழுத்தாளர்களை - தண்டல்காரர்கள் என்று கூறுகின்ற அவலம், பத்திரிகை ஆசிரியன் யாருக்கும் பயப்படக்கூடாது, உண்மையை மட்டுமே எழுதவேண்டும் என்பன, வேள்வி நெருப்பின் ஊடாக ச.வே.பஞ்சாட்சரம் கூறும் கருத்துக்களாகும்.

தேச விடுதலைக்காகச் சென்று இறந்தவர்களின் சாவே - சாகாத சாவு. ஏனையவர்கள் வாழ்வு - வாழாத வாழ்வு என்பதையும், மனிதர்கள் இடம்பெயர்ந்த வேளையிலும், ஒரு உயிர் இடம்பெயராது, தன் மண்ணில் இருந்து இறந்த செய்தியும், தேசவிடுதலை பற்றிய கதைக் கருத்துக்களாக வேள்வி நெருப்பில் காணப்படுகின்றன.

குடிபோதையால் விளையும் துன்பங்கள் தொடர்பான கதைகளும் 'வேள்வி நெருப்பில் காணமுடிகின்றது. 'வேள்வி நெருப்பு' என்ற கதை அதனையே வலியுறுத்துகின்றது.

வேள்வி நாளில் குடிமயக்கத்தில் உறங்கிக்கிடக்கும் பெற்றோர், தங்கள் மகன் குப்பி விளக்குப் பற்றி எரிந்தபோதும், உணராது உறங்கிக் கொண்டிருக்கின்றவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர் என்பதும் 'வேள்வி நெருப்பு' என்ற சிறுகதை குறிப்பிடுவது இதனையே.

சிறிய கதைகளாக இருந்தாலும், ஆழமான கருத்துக்களை வலியுறுத்தி, 'வேள்வி நெருப்பு' எழுதப்பட்டுள்ளது. இக்கதைகள் கூறும் கருத்துக்களைப் பார்க்கும்போது, ஒரு கதையைக் கொண்டு ஒரு நாவல் எழுதலாம் என்ற உணர்வைத் தருவதாக அமைகின்றது.

**நகுலன்**

# புதிதாய் மலர்ந்த ஆறு



சென்ற வருடம் இதே தினத்தில் ... பாம்பொன்றின்
காய்ந்தது கழன்றுபோன செட்டையென
உலர்ந்தபடி
தடமழிந்து;
மண்ணும் பொருக்கு வெடித்து... வரள்-
நெடிபரவக் கிடந்ததென்னூர்
ஆறு நடந்தபாதை!
நேற்றாற்றுப் படுக்கைதனில் எந்த நிழலுமில்லை.
எந்த மரமுமில்லை.
எந்த வயலுமில்லை
நீச்சல் அடிப்பதற்கோ புனித நீராடுதற்கோ
யாரும் வரவுமில்லை!
கொக்கு, குருவியென
எதுவுந் திரிந்ததில்லை!
இறந்து, நீர் வற்றியோய்ந்து
பொருக்கு வெடித்து 'வரள் நெடி' யோடிருந்த தெங்கள்
ஆறு நடந்தபாதை.
இன்றோ... சலசலென்று
கரைகளோடு கைகுலுக்கிக்கதைபேசி நகர்கிறது
எங்களது ஆறு!
என்காலை வளைத்தபடி
தரைதட்டி வந்த நிலாப்படகை என் காலடியில்
காட்டி;
தளம்பி;
கதைக்கிறது எங்களாறு!
“இப்படியே எங்களது இளமையோடும் இனிமையோடும்
என்றும் இருந்தெம்மை இரட்சிக்க வேண்டுமென”
ஆசீர் வதித்தேன்.
“இனிஎந்தப் பெருங்கோடை
வந்தாலும் வற்றேன் நான்” எனஎனக்கு உறுதிகூறி
கரைபுரள என்னைக்
கடக்குதெங்கள் ஊர் ஆறு!

**ஜெயசீலன்**

# கவிதைச் சோலை

## நிம்மதிச் சாவு



முதிர்ந்த மரமெந்தன் வீழ்வில்
மகிழ்வு இருக்கத்தான் போகிறது.
இருபது வருடங்களுக்கு முன்பிதை
நினைத்துக்கூட நான் பார்த்ததில்லை.
எத்தனை குண்டுகள் சுமந்திருப்போம்
எத்தனை இதயங்கள் இழந்திருப்போம்
ஈழத்தில் தீப்பிடித்தபோது
நீராயெழுந்திட்ட நிலாக்களிலே
தம்பியு மொருவன்.
நீண்ட காலமாய் நீராயிருந்திட்ட
பெருமை அவனுக்குத்தான்.
எம் விடுதலைக் கீற்றின்
ஆணி வேரறுத்திட
சூழ்ச்சிகள் நடந்தன.
ஆணி வேரறுக்க வந்த
அயலவனும் அவமானப்பட்டான்.
விதைமுளையாகி சிறுமரமாகி
விருட்சமான இன்றைய நிலை.
தம்பியின் சிறந்த தலைமை.
மக்கள் மனதினில் நிம்மதிப் பெருமூச்சு.
இந்த நிலையினில்...
என் சாவினை மகிழ்வுடன் ஏற்க
நான் தயார்.
தம்பி பிறந்த தமிழீழத் தரணியிலே
முதிர்ந்த மரமெந்தன் வீழ்வு
நிச்சயமாயெனக்கு நிம்மதியைத் தரும்.

**கி.அ.தில்லைதாசன்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*முயற்சி திருவினையாக்கும்.*

- தமிழ்ப்பழமொழி

## நமது நோக்கு

# ஊக்குவிக்கப்பட வேண்டிய விளையாட்டு!

தமிழீழ வலைப்பந்தாட்ட அணி, இங்கிலாந்தின் புறோமின் நகரில் நடைபெற்ற எட்டாவது தமிழர் விளையாட்டு விழாவில், பங்கேற்க தாயகத்திலிருந்து சென்றிருந்தது.

தாயகத்திலிருந்து பல்வேறு சிரமங்களின் மத்தியில், பயணத்தை ஆரம்பித்த தாயக வலைப்பந்தாட்ட அணி- எட்டாவது சர்வதேச தமிழர் விளையாட்டு விழாவில் மட்டுமன்றி, இங்கிலாந்தின் பல்வேறு அணிகளுடனும் போட்டியிட்டு - அனைத்திலும் வெற்றியும் கண்டு, நாடு திரும்பியிருக்கிறது.

அரையிறுதிப் போட்டி அனைத்திலும் வெற்றிபெற்ற இந்த வலைப்பந்தாட்ட அணிக்கு, கிளிநொச்சியில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. வலைப்பந்தாட்ட அணியின் வெற்றியும் - அவர்களுக்கான வரவேற்பும் தாயகத்தில் விளையாட்டுத்துறைக்கு கிடைத்த முக்கியமான திருப்புமுனை என்றே கூறவேண்டும்.

போரினால் சீரழிந்து, விளையாட்டுத்துறை குறித்து கவனிப்பாரின்றி இருந்ததொரு நிலையில், ஒரு தரம் மிக்க வலைப்பந்தாட்ட அணியைப் பயிற்றுவித்து உருவாக்கியமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

இலங்கையின் விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில் - தமிழ்மக்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். தமிழ் விளையாட்டு வீரர் சர்வதேசரீதியான போட்டிகளில் மட்டுமன்றி, சர்வதேசரீதியான போட்டிகளிலும் கூட பங்குபற்றப் போதிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

எந்தவொரு விளையாட்டுத்துறையை எடுத்துக் கொண்டாலும் தமிழ் வீரர்களின் பங்களிப்பு புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது. ஆனால், இந்தப் புறக்கணிப்பானது - திறமையான விளையாட்டு வீரர்கள் இல்லை என்று கூறி நியாயப்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

உண்மை நிலை அதுவல்ல. தமிழ் விளையாட்டு வீரர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்காமலேயே, அவர்கள் திறமையற்றவர்கள் என்று பட்டம் சூட்டப்பட்டு, தேசிய, சர்வதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளிலிருந்து ஓரங்கட்டப்பட்டனர்.

விளையாட்டுத்துறையிலும், இன ரீதியான பாராபட்சமும் மிகத்தாராளமாக காட்டப்பட்டதுடன், தமிழ் வீரர்களின் திறமை முற்றாகவே ஓரங்கட்டப்பட்டது. ஆங்காங்கே ஒருசில வீரர்கள் மட்டும் தேசிய, சர்வதேசப் போட்டிகளில் பிரகாசிக்க முடிந்தது.

ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால், தமிழ் விளையாட்டு வீரர்களின் திறமையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படாததே, அவர்கள் முன்னணி நிலைக்கு வராமைக்கு காரணம் என்றால் -

தமிழ் விளையாட்டு வீரர்கள் - குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு விளையாட்டுத்துறையில் போதிய பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. ஏதோ பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளிலிருந்து வீரர்கள் - மாவட்ட, மாகாண மட்டப்போட்டிகளோடு நின்று விடுகின்றனர்.

ஆனால் தேசிய மட்டத்துக்கு செல்வதற்கான போதிய பயிற்சிகள் இந்த வீரர்களுக்கு வழங்கப்படாததால், அவர்களால் தொடர்நது முன்னேறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில்தான், தமிழ் விளையாட்டு வீரர்கள் ஓரங்கட்டப்பட்டனர்.

இன்று வரையில், இதேநிலைதான் நிகழ்கிறது. ஆனால், தொடர்ந்தும் அதே நிலை நீடிக்க அனுதிக்கக்கூடாது. அரசாங்கம் இந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்காவிட்டாலும் கூட, தமிழ்மக்கள் சுயமாக விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்தகைய ஊக்குவிப்பு முயற்சியாக தமிழீழ விளையாட்டுத்துறை, வீர வீராங்கனைகளுக்கான பயிற்சிகளில் கவனம் செலுத்தி வருகிறது. முதலாவதாக, தாயக வலைப்பந்தாட்ட அணி ஒன்றைத் தெரிவு செய்து - அந்த அணியை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் லண்டனுக்கு அனுப்பி அங்கு சகல போட்டிகளிலும் வெற்றி பெறவும் வைத்திருக்கிறது.

இந்த வகையில், விளையாட்டுத்துறை பொறுப்பை எவரும் குறைத்து மதிப்பிடமுடியாது. இனிவருங்காலங்களிலும், சகல விளையாட்டுத்துறைகளும் விரைவாகவும், சரியாகவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இதற்குப் போதிய - அதேவேளை தகுதிவாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். பயிற்சி மூலமே விளையாட்டில் சாதிக்க முடியும். சிறந்த பயிற்சியாளர்களை நியமிப்பதன் மூலம் சர்வதேச தரத்துக்கு எமது விளையாட்டுத்துறையைக் கொண்டு செல்ல முடியும்.

# போராட்டத்தின் ஆரம்பகாலத்திலிருந்து நாங்கள் வரி வசூலித்து வருகின்றோம்

## யாழ்.மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் செம்மணன்



(யாழ்ப்பாணம்)

எமது இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே, நாம் மக்களிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், இப்பொழுது சிலர் நாம் வரி வசூலிப்பதை உலகிற்குத் தவறாகக்காட்ட முனைகிறார்கள். இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செம்மணன்.

நேற்றுமுன்தினம் அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் இடம்பெற்ற, தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் சங்கமத்தில் கலந்துகொண்டு, சிறப்புரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் ச.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது விடுதலைப் போராட்டம் - என்று தொடங்கப்பட்டதோ, அன்றிலிருந்து இன்றுவரை நாம் மக்களிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறோம். காலத்திற்குக் காலம் அவை பெறப்படும் வடிவம்தான் மாறியிருக்கிறதேதவிர, இது வழமையான நடைமுறைதான். ஆனால், இன்று நாம் வரி வசூலிப்பதை உலகிற்குத் தவறாகக்காட்ட முனைகிறார்கள். இது வேதனைக்குரிய விடயமாகும்.

போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் - நாம் பத்துப் பன்னிரண்டு போராளிகளாக, எமது மக்களின் வீடுகளிற்குச் சென்று உணவுண்டோம், உதவிகள் பெற்றோம். ஆனால், இன்று நாம பல்லாயிரக்கணக்கான போராளிகள் கொண்ட, ஒரு தேசிய இராணுவமாக வளர்ந்துள்ளோம். இந்தநிலையில், உணவுக்காகவும், எமது பிறதேவைக்காவும் - மக்களை நாடிச் செல்வதென்பது கடினமான காரியம். எனவேதான், நாம் இன்று வரி வசூலிக்கின்றோம். அதிலும், சில விட்டுக்கொடுப்புகள் இருக்கின்றன. இன்னும் உருவாக்கப்படும்.

சாதாரணமாகப் பார்த்தால் ஒரு போராளிக்கு - ஒரு நாளுக்கான உணவுச்செலவு நூறு ரூபா என்றால், பல ஆயிரம் போராளிகளுக்கு உணவுச்செலவாக ஒரு நாளைக்கு எவ்வளவு செலவு ஏற்படும். எனவே, ஒரு மாதத்திற்குக் கணக்குப் பார்த்தால், கோடிக்கணக்கில் செலவு ஏற்படும். இதற்காகத்தான் நாம் வரி வசூலிக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் பலமாக உள்ளபோதுதான், தமிழினம் தலைநிமிர்ந்து வாழ முடியும் என்பது இன்று எல்லோரும் ஏற்றுக்கொண்ட உண்மை.

சிலர் இன்று பேசிக்கொள்கிறார்கள்- சமாதானம் வந்துவிட்டது. இது சமாதானக் காலம் அல்ல. சமாதானத்திற்கான காலமே. ஆனால், நாம் விடிவு ஒன்றை அடையும் வரையுள்ள காலம், அனைத்துமே விடுதலைக்கான காலம்தான். அது போராக இருந்தாலும் சரி, சமாதானமாக இருந்தாலும் சரி.

எமது தமிழினம் நம்பிக்கெட்ட இனம். இது வரலாறு சொல்லும் பாடம். எனவே, இம்முறையும் நாம் நம்பிக்கெடத் தயாராக இல்லை. இதனாலேயே, எமது தலைவர் ஒவ்வொரு முடிவுகளையும் மிகவும் நிதானமாக எடுக்கிறார். இன்று நாம் சமாதான காலத்திலே இருபத்தாறு போராளிகளை இழந்துள்ளோம். ஆனாலும், நாம் போருக்குத் திரும்பவில்லை. சமாதானத்திலே பற்றுறுதி உள்ளவர்களாக உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், வலிகாமம் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிறில், இணைப்பாளர் கனகலிங்கம் எனப் பல முக்கியஸ்தர்களும், தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை ஊரக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்விமாணி கற்கைநெறிக்கு

# தனிச்சிங்களத்தில் விண்ணப்பப் படிவம்

(கிளிநொச்சி)

வன்னிப்பிரதேசத்தில் கல்விமாணிப்பட்ட கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள், தனிச்சிங்களத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தால் கடந்த வருடத்திலிருந்து தொலைக்கல்விமூலம் கல்விமாணிப்பட்ட கற்கைநெறி வகுப்புக்கள் - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடத்தப்பட்டுவருகின்றது. 2004/2006 கல்வி ஆண்டுக்கான விண்ணப்பங்களே, தனிச்சிங்களத்தில் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்மொழி மூலம் கற்கைநெறிகள் நடத்தப்படும் நிலையில், விண்ணப்பப்படிவங்கள் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளமையால், விண்ணபிக்கும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

(122)

# வழி அனுமதிப் பத்திரம் இல்லாத பஸ்களின் அனுமதியை ரத்துச்செய்யக் கோரிக்கை!

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையில் பத்து தனியார் பஸ் வண்டிகள் - வாகன வழி அனுமதிப்பத்திரம் இல்லாமல் பயணிப்பதாகவும், அவற்றின் அனுமதியினை இரத்துச் செய்யும்படி தனியார் போக்குவரத்து சபையின் தலைவர் கெமுனு விஜயரத்ன - தேசிய போக்குவரத்து சபையின் ஆணையாளரிடம் கேட்டுள்ளார்.

இதுபோன்று இலங்கையில் பல தனியார் பஸ் வண்டிகள் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமல் பயணிப்பதால், பதிவு செய்யப்பட்ட தனியார் வாகனங்களினால் இலாபமீட்ட முடியாதநிலை உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெற்காசிய நாடுகளின்

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு நேற்றையதினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 3 ஆம் திகதிவரை நடைபெறும் இந்த நிகழ்வில் - இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர்கள் உட்பட நூறுபேர் வரையில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட இலங்கை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா உரையாற்றுகையில் - நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதன்மூலமே, நாட்டு மக்களின் பாதுகாப்பைப் பேணமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# போக்குவரத்து சபையின் கட்டணங்கள் அதிகரிப்பு!

மக்கள் போக்குவரத்து சபையின் கட்டணங்கள் இன்றுமுதல் 15 வீதத்தால் உயர்கின்றது.

இதன்படி - 3 ரூபாய், 4 ரூபாய் கட்டணங்கள் அதிகரிக்கப் படமாட்டாதெனவும், 4 ரூபாய்க்கு மேல் பெறும் கட்டணங்களே 15% ஆல் அதிகரிக்கப்படுகின்றது.

கடந்த 2001 ஆம் ஆண்டிற்கு பின், இலங்கை போக்குவரத்து சபையின் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லையெனவும், ஆனால், தனியார் பஸ்களின் கட்டணம் 2001 ஆம் ஆண்டிற்கு பின், இரண்டு தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், இலங்கை போக்குவரத்து சபைக்கு - கிலோமீற்றர் ஒன்றிற்கு 3 ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே இலங்கை போக்குவரத்துசபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

# பெந்தோட்டப் பகுதியில் சுற்றுலா மையம் அமையும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

மிகவிரைவில் பெந்தோட்டையில் - 5000 ஏக்கர் நிலத்தில், சுற்றுலா நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது என, பிரதமா ரணில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - நேற்றை காலி கோட்டைக்கு விஜயம் செய்தபோது அங்கு இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஏனைய நாடுகளின் விமாணநிலையங்களில் உள்ள சுதந்திரம் போல் இலங்கையிலும் திறந்துவிடவேண்டும்.

வெளிநாட்டிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணி ஒருவர் ஒரு நாளைக்கு அறுபது அமெரிக்க டொலர்களையே செலவு செய்கிறார். ஆனால் அதனை நூறு டொலர் ஆக ஆக்குவதற்கு இலங்கையின் சுற்றுலாத்துறையை விருத்தி செய்யவேண்டும். என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# தமிழினத்தின் அழியாச் சொத்து தனிநாயகம் அடிகளார் ஆவார்!



"தனிநாயகத்திற்கு ஒரு சபாநாயகம் தேவையில்லை. அவர் ஒரு தனிநாயகம். தனிநாயகம் பேசிற்று என்றால், தமிழ் உலகமே பேசியது என்று பொருள். தமிழ் உலகின் சின்னம் தனிநாயகம்" என்று தமிழ்ஈழத்தின் பண்பாட்டுத் தலைநகரம் யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் நடைபெற்ற, தமிழ் மாநாட்டில் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை செப்பிய செம்மொழி, தனிநாயக அடிகளாரின் தனிச் சிறப்பினைத் தரணிக்கு எடுத்துக்காட்டுகிறது.

தனிநாயகம் என்ற பெயரில் ஏதோ எளிதில் விளக்கமுடியாத தனிக்கவர்ச்சி இருந்தது. எனவேதான், தமிழக மூதறிஞர் ராஜாஜி ஓரிடத்தில், தனிநாயகம் என்னும் பெயரைக் கேட்கும் போதெல்லாம், நான் எப்போதும் கவரப்பட்டுள்ளேன். என்று ராஜாஜி தன்னை மறந்தநிலையில் கூறிய கருத்து, இங்கு மகிழ்வோடு நினைவுகொள்ளத்தக்கதாகும்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு" என்பது 5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலரின் அருளூரும் திருமந்திரமாகும். இப்பொருள் பொதிந்த கூற்றிற்குப் புதுவடிவமும், புதுப்பொருளும், புதுமெருகும் ஊட்டுகின்ற முறையில், தன் சொற்பொழிவுகளில் இச்சொற்றொடரை அடிக்கடி கையாண்டு, தன் வாழ்வின் குறிக்கோளை அடிகளார் விளக்கியுள்ளார். இதனை அவர் தனக்கே உரிய தனிமுறையில் உச்சரிக்கின்றபோது, செவிமடுக்கின்ற செந்தமிழ் மக்கள் செம்மாந்திருப்பர். இந்தக் காட்சி மறக்கமுடியாத தனிக்காட்சி ஆகும்.

தனிநாயக அடிகளாருக்கு இளமையில் சூட்டப்பட்ட பெயர் 'சேவியர்' என்பதே ஆகும். உரோம் நாட்டில் அவர் பயில்கின்றவேளையில், ஏற்பட்ட தனித்தமிழ் பற்றுக் காரணமாக- சேவியர் என்ற பெயருடன் 'தனிநாயகம்' என்ற பெயரையும் சூட்டிக்கொண்டார். தனிநாயகம் என்பது இவரின் மரபுவழிப் பெயராகும்.

தமிழகத்திலுள்ள காஞ்சிபுரத்திலிருந்து, ஈழத்திற்குக் குடிபெயர்ந்த தனிநாயகம், முதலியாரின் மரபில் வழிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதியாரின் சொல்வடிவத்திற்குச் செயல் வடிவம் கொடுத்த அடிகளார், "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்றும் "திறமான புலமையெனில் பிறநாட்டவர் அதனை வணக்கம் செய்தல் வேண்டும்" என்றும் தமிழிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் பாடியவர் பாட்டிற்கொரு புலவன் பாரதி. பாரதியின் பாட்டிற்கு செயல்வடிவம் கொடுத்து, உலகத் தமிழ் உள்ளங்களை ஈர்த்த பெருமகனாக விளங்கியவர் நம் தனிநாயகம் அடிகளார்.

தமிழகத்திற்கு அடுத்த நிலையில், தமிழுக்கு வாழ்வும், வளமும் ஊட்டிய பெருமை தமிழீழத்திற்கே உண்டு. குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொட்டு, இந்நூற்றாண்டுவரை சிறப்புமிக்கப் பணிகளை ஆற்றிய பெருமை ஈழத்தமிழ் அறிஞர்களையே சாரும்.

இவர் ஈழத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, நெடும்புகழ் படைத்த நெடுந்தீவில் பிறந்த - நாகநாதன் கணபதிப்பிள்ளைக்கும் கரம்பனைச சேர்ந்த சிசில் இராசம்மா பஸ்தியாம்பிள்ளைக்கும், 1913 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரண்டாம் நாள் மகனாகப் பிறந்தார்.

தனிநாயகம் அடிகளாரின் தொடக்கக் கல்வி ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் தொடங்கியது. பின்பு, அவரின் மேன்நிலைப் படிப்பை 1923 ஆம் ஆண்டு தொடங்கி 1930 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் பத்திரிசியார் கல்லூரியில் கற்றார்.

1928 இல் **E.S.LC.** தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற இவர், 1930 இல் நடைபெற்ற கேம்பிரிஜ் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலத்திலும், வரலாற்றிலும் திறமையுடன் தேர்ச்சி பெற்றார். பின்பு ஆறுமாத இடைவெளியில் இலத்தீன் பயின்று மெற்றிக்குலேசன் தேர்விலும் மிகச்சிறந்து விளங்கினார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த இப்பெருமகன்- ஊர்காவற்துறையிலும், புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றதை அடுத்து, இத்தாலியிலும், இங்கிலாந்திலும் இறையியல் பயின்று, இந்தியா வந்து இறைபணி தொடங்கி, தமிழ் மீது கொண்ட தணியாத காதல் காரணமாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முறையாகத் தமிழ் பயின்று, பின்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.

அத்தோடு - உலக நாடுகள் பலவற்றிற்கு தமிழ்த் தூதுவராகச் சென்று, தமிழின் தொன்மையையும், பெருமையையும் உலகத்தாரிற்கு எடுத்துரைத்து, உலகம் போற்றும் ஒப்பற்ற தமிழ்க்குடிமகனாகத் தனிநாயகம் அடிகளார் விளங்கினார்.

தனிநாயகம் அடிகளின் உள்ளம் எத்துறையில் மூழ்கிக் கிடந்தது என்பதற்கு, அவர் எழுதிய "தமிழ்த்தூதில்" பின்வரும் கூற்றுச் சான்றாகப் பகரும். "திசைநோக்கி கோயிலையும், தமிழ் மொழியையும் எனக்குத் தாய்மொழியாகக் கொள்ள வாய்ப்பளித்த இறைவனைக் கைகூப்பி வணங்குகின்றேன்" வேறு சொற்களின் விளிம்பின் - இறையுணர்வும், இன்பத்தமிழ்

மா.க.ஈழவேந்தன்

உணர்வும் இவரின வாழ்வில் உந்துசக்தியாக விளங்கின எனக்கூறின, அது மிகைக்கூற்றல்ல.

அடிகளின் பணி - பல்துறைப் பணியாக விளங்கியது. எனினும், அவற்றில் தலையாயது- அவரின் தமிழ்ப்பணியும், சமயப் பணியுமே ஆகும். ஏன், அவரின் சமயப்பணியையும் மிஞ்சுகின்ற அளவுக்கு, அவரின் தமிழ்ப்பணி தலைதூக்கி விளங்கியது.

இவர் ஆற்றிய பணிகளில், இவரிற்கு அழியாப் புகழைத் தேடித்தந்தது - இவர் 1964 ஆம் ஆண்டு மலேசியாவில் கூட்டிய தமிழ் ஆராய்ச்சி மாநாடே ஆகும். உலகில் மொழிக்கென்று முதலில் மாநாடு கூட்டிய பெருமை இவரையே சாரும்.

1964 இல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை இவர் வித்திட்டதின் விளைவு - 1968 இல் தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையிலும், 1970 இல் பிரெஞ்சு நாட்டின் தலைநகராகிய பாரிஸிலும், 1974 இல் தமிழீழத்து யாழ். நகரிலும், 1981 இல் தமிழ்நாட்டில் நான்மாடக்கூடலாக விளங்கும் மதுரையிலும், தமிழிற்கு உலகளவில் மாநாடு நடத்தக் காரணமாக அமைந்தது. இம் மாநாடுகளை அடுத்து உலகின் ஏனைய பகுதிகளிலும் தமிழ் மாநாடுகள் நடைபெற இவரின் சிந்தனையும் செயற்பாடும்தான் காரணமாக அமைகிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் பொருள் பொதிந்த கூற்றை, இன்றைய நூற்றாண்டின் தேவைக்கேற்ப புதுவடிவம் கொடுத்து, மலேசியா முன்னாள் தலைமை அமைச்சர் துங்கு அப்துல் ரகுமானை இச் சொற்றொடரைத் தமிழில் உச்சரிக்கச்செய்ததோடு **Every Country is my Country, Every Man is My Kingsman** என்று ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துக் கூறுகின்ற நிலையை உருவாக்கிய பெருமை நம் தனிநாயகம் அடிகளாரையே சாரும்.

இதேவேளை-

எமது பல்கலைக்கழகத்தில் - இந்தியத் துறை பல்மொழிப்புலமை பெற்ற, பரந்த மனப்பான்மை கொண்ட ஒரு அறிஞரைத் தலைவராகப் பெற்றது, இப்பல்கலைக்கழகத்தின் பெரும் பேறாகும். இங்கு நான் பேராசிரியர் தனிநாயகம் அடிகளையே குறிக்கின்றேன். அவருடைய தலைமைதான் இந்த மாநாட்டை இப்பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்குக் வழியமைத்ததாகும் என்று பாராட்டுத் தெரிவித்தமை, இங்கு குறிப்பிடத்தக்கது.

தனிநாயக அடிகளார் புலமையின் ஊற்றாக விளங்கி - மொழித்துறை, இலக்கியத் துறை, சமயத்துறை ஆகிய துறைகள் அனைத்திலும் - தன் தனிமுத்திரையைப் பதித்துள்ளார். அதேவேளையில், அவர் ஓர் அரசியல் அறிஞராகவும் விளங்கிய பெருமகனாவார். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றியதையடுத்து, தமிழனின் எதிர்காலம் இருள் கவிழ்ந்து சுழ்ந்திருப்பதை உணர்ந்து தமிழனின் அரசியல் வாழ்வு வளம் பெற தம்மால் இயன்ற அனைத்தையும் செய்தார். ❑

# இலக்கியம் மூலம் வாழ்க்கையை அறிவதற்கு மொழியே சிறந்த ஊடகமாகத் திகழ்கின்றது!

**மொ**ழி சிறப்பானதாக இல்லாவிட்டால், அதில் தோன்றுகின்ற இலட்சியங்களும் சிறப்படைய மாட்டாது. மொழியே மூலப்பொருள். மொழி பஞ்சு என்றால் இலக்கியம் ஆடையாகும். அந்த வகையில் மொழிக்கு தொண்டாற்றுவோர் - இலக்கியத்துக்கும் தொண்டாற்றுகின்றவர் ஆகின்றனர்.

இலக்கியம் ஒரு நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, கலை நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்ற ஒரு கருவியாகத் திகழ்கின்றது.

ஒரு நாட்டின் வரலாற்றை அறிய- எமக்கு இலக்கியங்கள் உதவுகின்றன. இலக்கியங்கள் ஒவ்வொரு காலப் பகுதிகளிலும், ஒரேமாதிரியாக எழுவதில்லை. காலத்தின் கண்ணாடியாக விளங்குகின்ற இலக்கியங்கள் எழுந்த காலத்தில், வாழ்கின்ற மக்களின் மனங்களைப் படம் பிடித்துக் காட்டுவனவாகவே அமைகின்றன. மக்கள் மனநிலைகள் - ஒரே மாதிரியாக எப்போதும் இருப்பதில்லை என்பதால், இலக்கியங்களும் மாறுபட்ட போக்குகளையே கொணடிருக்கின்றன.

இலக்கியத்தின் ஊடாக மக்களை, அவர்களின் வாழ்க்கையை அறிய எமக்கு - மொழியே ஊடகமாக விளங்குகின்றது. இன்று கணினியுகம் வந்தபோதும், மொழியாற்றல் என்பது அவசியமான தொன்றாகவே கருதப்படுகின்றது.

தற்போது, காணப்படும் பிரச்சினை என்னவென்றால் - மொழியறிதலுக்குச் சரியான வசதிகள், வாய்ப்புக்கள் கிடைக்காமல் இருக்கின்றன என்பதுதான். அதைவிடவும் வாய்ப்புக்கள் கிடைத்தவர்களும், அதைச் சரியானமுறையில் பயன்படுத்திக் கொள்ளாமையும், மொழிபற்றி விழிப்பூட்டல்களைச் செய்யாமல் இருப்பதுமே காரணமெனக் கூறலாம்.

இதற்குரிய பயன்தரும் நடவடிக்கைகளை எடுப்பது - மொழியறிந்தவர



கள் எடுக்கவேண்டிய நடவடிக்கையாக அமைகின்றது.

நாம்பேசும் மொழி - தமிழ்மொழி. அது கல்தோன்றி, மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி என்று பேசுவோர் பலர் இருக்கின்றார்கள்.

'கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய தமிழென்றால், அந்த முதற்தமிழன் காலெடுத்து நடந்த நிலம் எது? அவன் மலம் கழித்துவிட்டு, கழுவியது எதனால்? என்ற கவிஞர் புதுவை இரத்தினத்துரையின் வரியினை இப்போ நினைத்துப் பார்த்தல் வேண்டும். தமிழர் பெருமைகள் என்றுகூறி, தமிழின் நிழலில் ஒதுங்கியிருந்து வாழ்க்கை நடத்துபவர்களுக்காகச் சொல்லப்பட்ட வரிகள் அவை.

அவ்வாறான ஒரு நிலைமை, தொடராமல் இருக்கவேண்டும் என்பதே அனைவரதும் ஆசையுமாகும்.

இந்த ஆசையைப் பூர்த்தி செய்வதற்குரிய ஆயத்தங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

தமிழ் எழுதுபவர்களைப் பொறுத்தவரையில், அவர்களே மொழியை, அதன் தனித்துவத்தை பேணுபவர்களாக அமைகின்றார்கள். தமிழினைப் பேசுபவர்கள் - எதையும் பேசிவிட்டுப் போய்விடுவார்கள். எழுத்துப் பேச்சை வடிக்கும்போது, ஏற்படும் சிக்கல்கள் நிறையவாகும்.

தமிழ்மொழியை முதலாம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகப் பட்டம் வரையும் அதைத் தொடர்ந்து கற்கிறோம். 'ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழிக்கு ஏற்ப, நாம் முன்பள்ளி ஆசிரியர்களிடம் குறைகண்டு பிடித்து, அவர்களுக்குக் கல்வி வசதிகளை, மொழியறிவை ஏற்படுத்திக் கொடுத்தால், எல்லாம் சரிவரும் என்று இருந்துவிட்டால், இபபிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட முடியாது.

முதலாம் ஆண்டில் மொழியின் வாசலுக்கு வருகின்ற மாணவநிலையில், மூலஸ்தானத்தைக் கண்டுவிடும் ஆசையை வளர்க்கலாமே ஒழிய, மூலஸ்தானத்தையே காட்டிவிட முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் கல்வி பயிலும் மாணவர்கள், புலமைப் பரீட்சையில் தேறும் வரையில் மொழியைக் கற்கிறார்கள். கற்பதற்கு மாணவர்களை - பெற்றோர் தூண்டுகின்றனர்.

பின்னர் ஆறாம் ஆண்டில் இருந்து க.பொ.த. சாதாரணதரம்வரை, மொழியறிவைச் சோதனை செய்வது எழுந்த மாதிரியான சோதனையாகவே உள்ளது. எறும்பு பிடித்துப் பார்த்து, குறித்த நான்கு விடையில் ஒன்றினைத் தெரிவுசெய்யும் தெரிவு வினாக்களே, மொழியறிவில் முக்கியப்படுத்தப்படுகின்றன. இதனால், மாணவர் மத்தியில் ஒருமை - பன்மை வேறுபாடு, உயர்திணை - அஃறிணை வேறுபாடு, ஆண்பால் - பெண்பால் என்கின்ற வேறுபாடுகள் தெரிந்திருக்க நியாயமில்லை.

அதேபோல், க.பொ.த.உயர்தர வகுப்புக்களில் - தமிழ் ஒரு பாடமாக எடுப்போர் தொகை, நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது. புதிய பாடத்திட்டத்தின்படி - அதிகளவில் பல்கலைக்கழகத்தின் அனுமதியை நாடியதாகவே - மொழியறிவுத் தேவை உள்ளது.

பல்கலைக்கழகங்களிலும் வாக்கியங்களில் - கால்போடுவதும், கொம்பு போடுவதும் தெரியாதவர்கள் நிறையவே உள்ளார்கள். பல்கலைக்கழகத்தில், இதற்குரிய நடவடிக்கை எடுப்பவர்கள் ஒருசிலர் இருந்தாலும், தங்களுடைய தொழிலை, அதாவது குறித்த பாடத்திட்டத்தை முடித்தால் காணும் மனநிலை மாறவேண்டும்.

பரீட்சை முடிவுகள் வெளியிடல், பரீட்சை விடைத்தாள்களைத் தெரிவு செய்தல், என்ற விடயங்களில் அக்கறை இல்லாதவர்களே அநேகம் பேர் உள்ளனர்.

இவ்வாறான ஒருநிலைமையில், தமிழ் - தமிழ்மொழி - மொழியறிதல் என்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது பற்றிச் சிந்திப்பவர்கள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்படியானவர்கள் இருந்தாலும், அவர்களால் ஒரு சிலரைத்தான் திருத்தமுடிகின்றது. ஒரு சிலர் மட்டும் திருத்துவதால், சமூகம் திருந்திவிடமுடியாது.

அதேவேளை, அனைவரையும் ஒரேயடியாகத் திருத்துவது என்பதும் முடியாததே. இந்தநிலையில், திருத்த முயற்சியாவது எடுக்காமல், வீணே இருப்பதுதான் துரதிஷ்டமானது.

தமிழ் அறிஞர்கள, தமிழைச் சிறப்புப்பாடமாகப் படித்தவர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், தமிழ்வளர்ச்சியில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' ஒன்றை ஏற்படுத்தி, அந்த கழகத்தில் - ஒவ்வொரு தரத்திலும் உள்ளவர்களைக்கொண்டு, பல்வேறு பணிகளை ஆற்றமுயற்சி எடுக்கலாம். இதன் முதற்கட்டமாகத் தமிழ் மொழியினைக் கற்பிப்பதற்கு என்றே ஒரு கல்வி நிறுவனத்தை ஆரம்பிக்கலாம். அதில் தமிழ்மொழியினைச் சிறப்பாகக் கற்றவர்களைக்கொண்டு, விரிவுரைகள் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

ஆண்டு ஒன்றுமுதல் பல்கலைக் கழகக் கல்விகற்கும் மாணவர்கள்

நகுலன் B.A.(HONS)

வரை அதற்கும் அப்பால், மேல் படிப்புப் படிக்கும் மாணவர்கள்வரை, அனைத்துத் தரப்பினரும் கல்வி பெறும் - மொழியறிவு பெறும் வகையில், கல்வி நிறுவனங்கள் இதுவரையும் இல்லை என்பது குறையாகவே இருக்கின்றது. இக்குறையை நிவர்த்தி செய்ய, நடவடிக்கை எடுப்பவர்கள்- தமிழ் உள்ளவரையும் வாழ்வார்கள். 'மெல்ல தமிழினிச் சாகும்' என்ற நிலையை மாற்றுபவர்களாக அவர்கள் விளங்குவார்கள்.

# ஆப்கானில் சுற்றிவளைத்து தாக்குதல்; 12 தலிபான் போராளிகள் சுட்டுக்கொலை!



ஆப்கானின் தென் மாகாணத்திலுள்ள ஷபூல் நகரில் தலிபான் போராளிகள் குழுவை, ஆப்கான் - அமெரிக்கக் கூட்டுப்படையினர் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பலமான ஆகாயத் தாக்குதலின் பின்னரே, இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலிபான் போராளிகளைக் கைதுசெய்யும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 12 தலிபான் போராளிகள் கொல்லப்பட்டதுடன் 8 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆப்கானில் அமெரிக்கப்படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வான் தாக்குதல்களாலும் சுற்றிவளைப்புக்களாலும் இந்த வாரத்திற்குள் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும், அமெரிக்க - ஆப்கான் கூட்டுப்படையினர் தரப்பில் 12 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை - ஆப்கானில் இருக்கும் வெளிநாட்டுப் படைகளுக்கு எதிராக ஜிகாத் புனிதப் போரை மீண்டும் தலிபான்கள் ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலிபான் போராளிகள் பாகிஸ்தான் எல்லையூடாகவே ஆப்கானுக்குள் நுழைவதாக ஆப்கான் அதிபர் ஹமீட் கர்சாய் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், செப். 11 தாக்குதலின் பின்னர் தலிபான் படைகளுக்கான ஆதரவைத் தாங்கள் விலக்கிக் கொண்டுவிட்டதாகவும் - நூற்றுக்கு மேற்பட்ட தலிபான் போராளிகளைத் தாங்கள் கைதுசெய்துள்ளதாகவும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

# ஐ.நா ஊடாக ரஷ்யப் படைகள் ஈராக்கில் நுழைவதற்கு முயற்சி




ஈராக்கில் அண்மைக்காலமாக வன்முறைகள் அதிகரித்துவருவதை சர்வதேச நாடுகள் பலமாகக் கண்டித்துள்ளன.

ஈராக்கில் நடைபெற்றுவரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்க, ஐரோப்பியத் தலைவர்களுடன் தான் ஆராய்ந்துவருவதாகக் கூறியுள்ள ரஷ்யத் தலைவர் விளாடிமிர் புட்டின் -

ஈராக்கில் ரஷ்யப் படைகளை அனுப்புவதற்கு ஐ.நாவின் பாதுகாப்பு கவுன்ஸிலின் தீர்மானத்தினை தாங்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஈராக் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதலை ஆரம்பித்தபோது எதிர்ப்புத் தெரிவித்த ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய 3 நாடுகளும் - தற்போது ஈராக்கில் ஐ.நா. ஊடாகத் தமது படைகளை அனுப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - ஈராக்கின் பலூஜா நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட கார் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக 3 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஹக்கீமின் மரணச்சடங்கில் ஏராளமானவர்கள் பங்கேற்பு

கடந்த வெள்ளிக்கிழமை கொலைசெய்யப்பட்ட ஷியா முஸ்லிம்களின் தலைவர் ஹக்கீமின் மரணச்சடங்கு நேற்று ஈராக்கில் ஆரம்பமானது. இதில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஷியா முஸ்லிம்கள் பங்குகொண்டு தமது அனுதாப அலைகளை வெளியிட்டனர்.

இவருடைய பூதவுடல் ஈராக்கின் புனித நகரான கர்பலா என்ற இடத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னர், செவ்வாயன்று இவரது உடல் நஜாப் நகரில் அடக்கம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் நீண்ட காலமாக ஈரானில் இருந்தமையால், இவரது இறுதிச் சடங்கிற்கு ஈரானில் இருந்து ஏராளமானவர்கள் கலந்துகொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால், ஈரான் எல்லையை மூடிவிடுமாறு ஈராக்கின் தற்போதைய ஆட்சியாளர்கள் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

### ஒரிசாவில் கனமழை!

இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் பெய்துவரும் கன மழையினால் அதிகமான மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடும் மழை காரணமாக நதிகள் பெருக்கெடுத்து ஓடுவதால் நதி வெள்ளத்தில் சிக்கி 7 பேர் இறந்துள்ளனர், 3 பேரைக் காணவில்லை.

# காஸாவில் எறிகணை வீச்சு; 2 ஹமாஸ் போராளிகள் பலி!



(காஸா)

பலஸ்தீனத்தின் மேற்குக்கரை காஸா பள்ளத்தாக்கில், அகதி முகாம்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் வைத்து இஸ்ரேலியப் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த 2 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை - காஸாவில் நடைபெற்ற பிறிதொரு சம்பவத்தில், எட்டு வயதுடைய பலஸ்தீனச் சிறுமி கொல்லப்பட்டுள்ளார். இஸ்ரேலிய டாங்கி ஒன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே இந்தச் சிறுமி கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் இனிமேலும் சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டுமாயின் அமெரிக்காவின் நேரடித் தலையீடு அவசியம் என்று பலஸ்தீனத்தின் தகவல் தொடர்பு அமைச்சர் நபில் அமிர் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

நின்றுபோயிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக இஸ்ரேல் தலைவர்களுடன் ஐரோப்பிய யூனியனின் அதிகாரி ஒருவர் நேற்று பேச்சுக்களை ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ராணுவக் கல்லூரியில் பெண்கள் மீது பாலியல் வல்லுறவு!

அமெரிக்காவில் விமானப்படைப் பயிற்சிக் கல்லூரியில் சேரும் பெண்களில் 12 சதவீதம் பேர் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாவதாகத் தெரியவந்துள்ளது.

கொலராடோவில் உள்ள ராணுவக் கல்லூரியில் பாலியல் ரீதியில் பெண்கள் பாதிக்கப்படுவதாகப் புகார் கூறப்பட்ட போதிலும், அக்கல்லூரியின் தலைவர் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து பாதுகாப்புத்துறையின் அதிகாரி, 579 பெண்களிடம் மே மாதம் விசாரணை நடத்தினார். மூத்த மாணவர்களால் தாங்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானதாக 43 பெண்களும், பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களுக்கு ஆளானதாக 109 பெண்களும் கூறினர். இதுபற்றி புகார் கூறியதற்காகத் தாங்கள் தண்டிக்கப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

# படமும் செய்தியும்



தனது உல்லாச விடுதியில் இருந்து வாஷிங்ரன் புறப்பட முன்னர், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் தனது செல்ல நாய்க்கு முத்தமிடும் காட்சி.



பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்திய ஹெலித் தாக்குதலில் ஹமாஸ் உறுப்பினர்கள் கொல்லப்பட்ட இடத்தைப் பலஸ்தீனச் சிறுவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் காட்சி.



40 ஆண்டுகள் தீவிரவாதிகளின் பிடியில் இருந்த கலமர் என்ற இடத்தைக் கைப்பற்றிய கொலம்பியப் படையினர், அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருக்கும் காட்சி.



இஸ்ரேலின் வான் தாக்குதலில் சேதமடைந்த வாகனத்திற்குள் இருந்து, இஸ்ரேலுக்கு எதிரான கோஷத்தை எழுப்பும் பலஸ்தீனச் சிறுவர்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland





யாழ்.நகரில் நேற்று நடைபெற்ற தனியார் மினிபஸ் உரிமையாளர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டோரைப் படங்களில் காணலாம்.

## வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்

# படையதிகாரிகளின் செயலைக் கண்டித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம்

(வவுனியா)

வவுனியாவில் 'பொங்கு தமிழ்' நிகழ்வு தொடர்பான கூட்டத்தில் - அரச அதிகாரிகள் எவ்வாறு கலந்து கொள்ள முடியுமெனப் படையினர் கேள்வி எழுப்பியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தக் கடிதத்தின் விபரம் வருமாறு -

வவுனியாவில் நடைபெறவிருக்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வை ஒட்டி, பொதுமக்களால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆரம்பக் கூட்டம் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அரச உத்தியோகத்தர் கள் உட்படப் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

கடமை நாட்கள் தவிர்ந்த விடுமுறை நாட்களில் - இக்கூட்டத்தில் பங்குகொண்ட அரச உத்தியோகத்தர்கள் மீது, இவர்கள் எவ்வாறு இக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியுமென்று கேட்குமாறு, திணைக்களத் தலைவர்களுக்கு - வவுனியா இராணுவக் கட்டளை அதிகாரியினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

நிரந்தர சமாதானம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே, வடக்கு-கிழக்கு 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த வேளையில், தெற்கில் சமாதானத்தை முறியடிக்கக்கூடிய எத்தனையோ ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்று வருவதை ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

மேலும், இந்த அரசு எத்தனையோ கோடி பணத்தையும், பொருட்களையும் விரயம் செய்து, நிரந்தர சமாதானத்தை வேண்டி ஊர்வலங்களையும், பல நிகழ்வுகளையும் நடத்திவருகிறது. இது வெறும் கண்துடைப்பா என எண்ணத் தோன்றுகிறது.

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' விழாவிற்கு தாங்களே - தங்களது சிறப்புப் பிரதிநிதியாக ஒருவரை அனுப்பி, அவ் விழாவினைச் சிறப்பித்தமை, நன்றியுடன் நினைவுகூருகின்றோம். ஆனால், மாவட்டத்திற்கு மாவட்டம் வெவ்வேறு அணுகுமுறைகளை கடைப்பிடிப்பது, மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது.

உண்மையான நிரந்தர சமாதானத்திற்காக - மக்கள் தங்களை உணர்ச்சிபூர்வமாக தியாகம் செய்து, பல முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் இந்த வேளையில்- வவுனியா இராணுவம் மக்களை பயமுறுத்தி - அவர்களின் இயல்பு வாழ்க்கையில் வீணாகத் தலையிட்டு, அவர்களைத் தொந்தரவுபடுத்துவதன் மூலம் - சமாதான ஒப்பந்தத்தை மீறி, மனித அடிப்படை உரிமை மீறல் சம்பவத்தில் ஈடுபடுகிறது.

இந்தச் செயற்பாட்டினை, வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாக கண்டிப்பதுடன், எக்கோணத்திலிருந்தும் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்களை ஊக்குவிப்பதற்கு மாறாக - மிரட்டல், பயமுறுத்தல் போன்ற செயல்களிலிருந்து விலகி, முழுச் சமூகமும் எதிர்பார்த்திருக்கும் நிரந்தர சமாதானத்திற்கு வழிசமைப்பதற்கு முன்வரவேண்டும். மாறான செயற்பாடுகள் - மீண்டும் ஓர் போர் மேகத்தை உருவாக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினரின் செயற்பாட்டுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, எங்கள் ஒன்றியம் தங்களை வேண்டிநிற்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

## வலி.வடக்கு மக்கள் மீள்குடியமர்ந்தக் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கிலுள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பகுதியைச் சேர்ந்த மக்கள், தம்மை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளால் - வலி.வடக்கிலிருந்து மக்கள் வெளியேறி, குடாநாடு மற்றும் வன்னிப் பகுதியில் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து வருகின்றனர்.

முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள், அடிப்படை வசதிகள் இன்றி-பொருளாதார ரீதியாகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், தம்மை சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறுகோரி, அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். முன்னரும் பலமுறை வலி. வடக்குப் பகுதி மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த் தக்கோரி, போராட்டங்களை நடத்தியதுடன் அரசாங்கத்திற்கு மகஜர்களை கையளித்ததும் குறிப்பிடத் தக்கது. (202)

## முத்திரைச்சந்தி விபத்தில் வவுனியா வாசி படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

முத்திரைச் சந்தி பகுதியல், மோட்டார் சைக்கிள் - டொல்பின் வான் ஒன்று மோதியதில், இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், வவுனியாவைச் சேர்ந்த கு.குணசீலன் (வயது-30) என்ற இளைஞனே படு காயமடைந்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த வான், கச்சேரி - நல்லூர் வீதியூடாக, செம்மணி வீதிக்குத் திரும்பும்போதே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இந்த இளைஞனே - தூக்கியெறியப்பட்டு, காயமடைந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

## பகுதிநேர ஆங்கில...

கில ஆசிரியர்களாக கடமையாற்றும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாகத் தெரிவித்த போதிலும்கூட, இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமையை ஆட்சேபித்தும், தமக்கு உடன் நிரந்தர நியமனம் வழங்கக் கோரியுமே இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஏற்கனவே, பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமது நியமனத்தை வலியுறுத்தி மூன்றாம் தவணையிலிருந்து வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர். தமது நியமனம் தொடர்பாக, இழுத்தடிக்கப்பட்டு வருவதையடுத்தே, அவர்கள் இன்று கல்வி அமைச்சின் அலுவலகம் முன் திரண்டு, தமது நியமனத்தை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ச)

## தமிழர் ஆசிரியர்...

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்க அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன், திஸ்ஸ தெய்வேந்திரா ஆணைக்குழுவின் சம்பள அறிக்கையின் அடிப்படையில் சம்பளத்தை உயர்த்துதல், தமிழ் -முஸ்லிம் அதிபர், இலங்கை நிர்வாக சேவை வகுப்பு - 3 இற்கான பதவி உயர்வுகளில் காணப்படும் இனரீதியான பாகுபாடுகளை நீக்கல், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற நடவடிக்கைகள் - ஒரு மாத காலத்துக்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் - முதற்கட்டமாக ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோம் என, தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாவசிவம் தெரிவித்துள்ளார்.

## சுயநிர்ணய உரிமையுடன் ...

சேர்ந்தோம். ஆனால், தற்போது மற்றைய 'கட்சிகள்' இந்த விடயத்தில் பின்வாங்கியுள்ளன.

விடுதலைப் புலிகளின் பங்களிப்பில்லாமல் - இலங்கையில் சமாதானம் ஏற்படாது. தற்போது அரசியலில் ஓர் தெளிவற்ற நிலை உருவாகியுள்ளது. சமாதானம் முன்னெடுத்துச் செல்லப்படுவதை சில கட்சிகள் விரும்பாமல் முட்டுக்கட்டை போடுகின்றன.

ஜே.வி.பி. தெற்கிலே எமக்கு எதிராகப் பிரசாரம் செய்துவருகின்றது. அதேவேளை - சமாதானப் பேச்சுவார்த்தையினை குழப்ப சந்திரிகா பல வழிகளில் தூண்டில் போடுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆனந்தசங்கரியும், ரவிராஜும் சாமி போல் - புலிகளை நாம் கும்பிட முடியாது எனக் கூறியுள்ளனர். இது வெளியாரின் தலையீட்டினாலேயே உருவாகியுள்ளது. பேச்சுவார்த்தைக்குப் பின்னர் - புலிகளுக்கு உலக அரங்கில் ஓர் அந்தஸ்து ஏற்பட்டுள்ளது. எனவே, அவர்களைப் பற்றி விமர்சிக்க கூட்டணிக்கு எந்த வித அதிகாரமுமில்லை. கூட்டணி இருபது வருட அரசியலையே தற்போதும் செய்துவருகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், வட - கிழக்கில் எந்தவிதமான மாற்றமும் முழுமையாக உருவாகவில்லை. மீளக்குடியமர்வு விடயத்தில் அரசாங்கம் பாராமுகமாகவே உள்ளது.

இடைக்கால நிர்வாகம் வந்தாலும் வலி. வடக்கினை அபிவிருத்தி செய்ய முடியாதநிலை காணப்படுகின் றது. இது தொடர்பாக நாம் மகஜர் ஒன்றினை - பிரதமருக்கு அனுப்பியுள்ளோம்.

தற்போது கிழக்கு முஸ்லிம்களைப் பற்றி கவலைப்படும் சந்திரிகா, உடத்தலவின்னையில் வைத்துப் பத்து முஸ்லிம்களைக் கொலை செய்யப்பட்டபோது எங்கே போனார்? அதேவேளை எமது கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் கொலையில் அம்மையாருக்கும், ரத்வத்தையின் மகனுக்கும் தொடர்புண்டு எனவும் அவர் தெரிவித்தார்,

## ஜே.வி.யினரால்...

தொகுதிகளைப் பறித்தெடுத்தார்கள்.

நாடு ஓரளவு சுமூகநிலை அடைந்துவரும் தற்போதைய நிலையில், அவசியமான விடயங்களை எதிர்ப்பதோடு நிறுத்தாமல், அரசு மேற்கொள்ளும் அத்தனை விடயங்களையும், முயற்சிகளையும் தவறு என்று தான் தோன்றித்தனமாக எதிர்ப்பது - ஜே.வி.பி.யினதும், சந்திரிகா அரசினதும் முட்டாள்தனமான முயற்சி என்றும், இத்தகைய வன்முறை - எதிர்ப்பலையை மக்கள் மத்தியில் மீண்டும் கிளப்பிவிடாமல், நாட்டின் அபிவிருத்திக்காகக் குரல் கொடுக்கவேண்டும் என்று, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

## வடக்கு...

ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். இந்த விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள் ஏன் இத்தகைய முடிவினை எடுத்துள்ளார்கள் என கூறவேண்டும்.

தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்களல்லர். ஆனால், தமிழ் மக்களுக்கென அரசியல் அபிலாஷைகள் உண்டு. அந்த அரசியல் அபிலாஷைகளுக்கு எதிராக முஸ்லிம் மக்கள்; முஸ்லிம் தலைவர்கள் செயற்பட்டால் - நாம் அதனை எதிர்ப போம்.

எமது தாயகத்தைப் பிரிக்க முஸ்லிம் தலைவர்கள் செயற்படுகிறார்கள். வடக்கு - கிழக்கினை விட தெற்கிலேயே 70 வீதமான முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள்.

எனவே, முஸ்லிம் தலைவர்கள் கூறுவது போல் நாம் அவர்களுக்கு எதிரான தமிழ்பேரினவாதிகளாக இருக்க முடியும். ஆனால், நாங்கள் அப்படிச் செயற்படப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்கள்



### நடராஜா பூபதி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பூபதி அவர்கள் 31.08.2003 நேற்று (ஞாயிற்றுக் கிழமை) காலமானார். இவர் நடராஜாவின் அன்பு மனைவியும், வனிதாவின் தாயாரும், கதிர்காமநாதனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (திங்கள்) பிற்பகல் 3.00 மணிக்கு, முடமாவடி இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முடமாவடி,*
*திருநெல்வேலி.*

(சி-1427)

தகவல்:-
கதிர்காமநாதன்.

### நீலகண்டக்குருக்கள் சிவசுப்பிரமணிய ஐயர்

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ நீ.சிவசுப்பிரமணிய ஐயர் (முன்னாள் பொது முகாமையாளர், நீர்வேலி.ப.நோ.கூ. சங்கம்) 31.08.2003 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வாலாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், சந்தானகுமாரன் (சந்தானம் போட்டோ, உடுவில்), நாகபூஷணி ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகாம்பிகையின் அன்பு மாமனாரும், சக்தித்தாயினி, சக்திபாலன், சக்திதர்சினி, சக்திதாரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.09.2003) திங்கட்கிழமை காலை 9மணிக்கு கற்பொக்கனை உடுவிலில் நடைபெறும்.

சிவஅம்பிகை வாசம்,
உடுவில்.

(சி-1426)

தகவல்:
சந்தானகுமாரன் (மகன்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.